விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஐப்பசி 28 | சனிக்கிழமை | (13.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 330

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்

# கொலைக் குற்றச்சாட்டின் பேரில் காஞ்சி காமகோடி பீடாதிபதி கைது

## உலகு வாழ் இந்துக்கள் அதிர்ச்சி



(சென்னை)

காஞ்சிகாம கோடி பீடத்தின் பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் தமிழகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காஞ்சி வரதராஜ சுவாமி திருக்கோவிலின் மேலாளர் சங்கரராமன் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் ஜெயேந்திரா சரஸ்வதி சுவாமிகளே முக்கிய குற்றவாளிகளாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

சங்கரராமன் கொலை வழக்கில் இதுவரை 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் கடைசியாக கடந்த 9 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இரண்டு பேரிடம் இருந்து பெற்ற உறுதியான வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே பீடாதிபதி ஜெயயேந்திர சரஸ்வதி கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவ் வழக்கை விசாரணை செய்த புலனாய்வு அதிகாரி பிரேம்குமார் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் தமிழக அரசுக்கு சொந்தமான செஸ்னா சிறப்பு விமானத்தின் மூலம் ஹைதராபாத் சென்ற காவல்துறை சிறப்புக் குழு இரவு 10 மணிக்கு மெஹாபூப் நகர் அருகே சங்கராச்சாரியாரை கைது செய்து அதிகாலை 2.35 மணிக்கு சென்னைக்கு கொண்டு வந்து அங்கிருந்து வாகனத்தின் மூலம் காசிபுரம் கொண்டு செல்லப்பட்ட சங்கராச்சாரியார் காசிபுரம் முதன்மை நீதிபதி முன் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவிலில் மேலாளராக இருந்த சங்கரராமன் (வயது 52) கொல்லப்பட்ட வழக்கில் சர்ச்சைக்குரிய அரசியல் சாமியார் காஞ்சி சங்கராச்சாரியார் காமகோடி பீடாதிபதி கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபின் பொதுஜன ஐக்கிய முன்னணியாலேயே சமாதான முயற்சிகள் ஆரம்பமானது



## ஜனாதிபதி சந்திரிகா பெருமிதம்

(நமது நிருபர்)

**பொதுஜன ஐக்கிய முன்னணி கடந்த 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பின்னர்தான் 'சமாதானம்' என்ற சொல் இலங்கை அரசியல் அகராதியில் உருவாக்கப்பட்டது. அதுவரை இந்தச் சொல்லை மக்கள் எக் காரணம் கொண்டும் அறிந்திருக்க மாட்டார்கள். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி மக்களுக்கும் நாட்டுக்கும் ஆற்றிய சேவையை முன்னிட்டு கம்பஹாவில் நேற்று மாபெரும் விழா நடைபெற்றது. எனினும் கடும்மழை காரணமாக இடைநடுவில் விழா இரத்துச் செய்யப்பட்டது. இதனால் ஜனாதிபதியால் இவ் வைபவத்தில் உரையாற்ற முடியவில்லை.

ஆனால் அங்கு தரித்திருந்த மக்களுக்காக அவர் கம்பஹாவில உள்ள ஒரகொல இல்லத்தில் இருந்து தொலைக்காட்சி மூலமாக நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...
⏭ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள். விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்-பகுதி-1

⏭ யசீர் அரபாத் பற்றிய சிறப்புக் கட்டுரை

# கழுத்து நெரிக்கப்பட்டு வயோதிபப் பெண் கொலை

## கோண்டாவிலில் பரபரப்பு

(கோண்டாவில்)

பூட்டிய வீடொன்றில் இருந்து, கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டு அழுகிய நிலையில் வயோதிப் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

கோண்டாவில் கிழக்கு புகையிரத வீதியில் உள்ள வீடொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். சிறையிலுள்ள 19 கைதிகள் இன்று விடுதலை செய்யப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில் ஐந்து பெண்கள் உட்பட 19 பேர் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

கசிப்பு, களவு போன்ற சிறு குற்றம் புரிந்த குற்றவாளிகளில் 19 பேர் இன்று விடுதலை செய்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில்

# மாவீரர் தினம் அனுஷ்டிப்பதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கும்

## புலிகள் - இராணுவம் சந்திப்பில் இணக்கம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாகவும் மாவீரர்தினம் தொடர்பாகவும் படையினருடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று பேச்சுவார்த்தையொன்றை நடாத்தியுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தை மட்டு. மாவட்ட போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவீரர் தினத்திற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படுமென படைத் தரப்பினரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

தேவையேற்படும் பட்சத்தில் இந் நிகழ்வுக்கு தமது முழுமையான பாதுகாப்பினை வழங்குவதற்கும் எந்த தருணத்திலும் தயாராகவே உள்ளதாக இச் சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டதாக மட்டக்களப்பு நகர அரசியல்துறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜன சமுத்திரத்தின் மத்தியில் அரபாத்தின் உடல் அடக்கம்



(ரமலா)

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் பூதவுடல் மேற்குக் கரையைச் சேர்ந்த ரமலாவின் ஒட்டோவா வளாகத்தில் பல லட்சக் கணக்கான பலஸ்தீன மக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து நல்லடக்கம் செய்யப்பட்டது. பெரும் சனநெருக்கடி மிகுந்த நிலையில் தாமதங்களுக்கு மத்தியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# மீன்களும் பாடும்!

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த சமயத்தில் ஜேர்மனிய கடற்படையிடம்' யு போட்' என்ற கப்பல்கள் இருந்தன. அந்தக்கப்பல்கள் இருக்கும் இடத்தை ரகசியமாகக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்கக் கடற்படை ஹைட்ரோ போன் என்ற கருவியை உபயோகப்படுத்தியது. மைக்ரோ போன் என்பது போல் தண்ணீருக்குள் உபயோகப்படுத்தும் மைக் தான் ஹைட்ரோ போன்.

இந்தக் கருவிகளை கடலுக்குள் இறக்கி ஆராய்ந்து கொண்டிருந்த போது எதிர்பாராத சில சப்தங்கள் கேட்டது. எங்கேயிருந்து இந்தச் சப்தம் வருகின்றது என அறிவதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். அதன் பின்புதான் தெரிந்தது. அதெல்லாம் கடலில் உள்ள சில மீன்கள் போடும் சப்தம் என்பது. இன்னும் கொஞ்சம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தனர். அதன்பின்தான் தெரிந்ததாம் அவையெல்லாம் வெறும் சப்தம் அல்ல சங்கீதம் என்பது.

ஆமாம்! சங்கீதம் என்பது ஏதோ மனிதனுக்கு மட்டும் சொந்தமான ஒரு சங்கதி என்று நினைத்து விடாதீர்கள். பறவைகளுக்கும் பாடத்தெரியும். அவற்றிற்குப் பாடத்தெரியும் என்பது அண்மைக் காலமாகத்தான் நமக்குத் தெரியும். இந்திய வானம் பாடி.. நன்கு பாடக்கூடியது. அதனால்தான் அது வானம்பாடி!

ஒரு சில பறவைகள் (**Jack Daws, Magpies,Starling**) கிளிகள் மாதிரி பேசும்- பாடவும் செய்யும் மணிப்பறவை என ஒன்று உண்டு. (**Bell Bird**) தென்அமெரிக்கா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் இது அதிகம். அதுபாடும் பாட்டு நீண்ட தூரத்திற்குக் கேட்டுமாம்.

ஐரோப்பாவில் உள்ள தேன் சிட்டு, அவுஸ்திரேலியாவில் உள்ள லயர் பறவை போன்றன நன்கு பாடுமாம். இமயமலைப் பகுதியில் ஒருவகைப் பறவை நன்றாக விசிலடிக்குமாம். அங்கே உள்ள பார்பட் என்ற பறவை நம்மைப் போலவே தனது குரலைத் தானே கேட்டு ரசிக்குமாம்.

மீன்களைப். பொறுத்தவரைக்கும் டாம் செல் (**Damsell**), கேட் (**God**) ஹேடாக் (**Haddock**) இவை நன்கு சப்தமிடும். ஹேடாக் மீன் போடும் சப்தம் மோட்டார் சைக்கிள் சப்தம் பேரன்று இருக்கும். அது அந்த மீனின் காதல் பாடல்.கோட் மீனின் ஒலி முனகல் ஒலி மாதிரிக் கேட்கும். கடலில் நன்கு பாடக்கூடியது திமிங்கிலம்.

அமெரிக்காவில் இரண்டு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் திமிங்கிலம் போடும் சப்தத்தைப் பதிவு செய்தார்களாம். வடபசுபிக் பெருங்கடலில் 460 திமிங்கிலங்களின் சப்தம், அட்லாண்டிக் பெருங்கடலில் 88 திமிங்கிலங்களின் சப்தம் போன்றவற்றைப் பதிவு செய்து கணனியில் கொடுத்துப் பார்த்தார்களாம். அதன் பின்பு தான் தெரிந்தது, அதாவது அவற்றிலெல்லாம் தாளலயம் இருப்பது தெரிய வந்தது. அதாவது அவை வெறும் சப்தம் அல்ல. தாளத்திற்குக் கட்டுப்பட்டு வரும் பாடல்.

ஒரு அணியில் உள்ள திமிங்கிலங்கள் எல்லாம் ஒரே பாடலைத்தான் பாடுதாம். காலப் போக்கில் அந்தப் பாடல் கொஞ்சம் கொஞ்சமாக மாறி வருகின்றது என்பதைக் கண்டுபிடித்து விட்டார்களாம். அதனால் மனிதர்கள்... நமக்குத்தான் பாடத் தெரியும் என்று மார்தட்டிக் கொள்ள வேண்டாம். மீனுக்கும் பாடத் தெரியும். திமிங்கிலத்திற்கும் பாடத் தெரியும்.

நம்மில் சிலபேர் பாடகர்களாக இருப்பதனால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு சில நன்மைகள் கூட ஏற்படுவது உண்டு.

ஒரு பாடகரைத் தேடி பக்கத்து வீட்டிலிருந்து ஒருவர் வந்தார். " சார்... நீங்கள் ஒரு சங்கீத வித்துவானாக இருப்பது எனது அதிர்ஷ்டம் " என்றார். "அப்படியா சொல்கிறீர்கள்..." என்றார் இவர். " ஆமாம் சார்... உங்கள் பக்கத்து வீட்டுக்காரன் தன்னுடைய வீட்டை என்னிடம் பாதி விலைக்கு விற்று விட்டுப் போய்விட்டான் சார்" என்றார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# யுத்தத்தால் அழிவடைந்து போயுள்ள வடமாகாணம் மனிதாபிமான முறையில் புனரமைக்கப்படுகின்றது

## வவுனியா வந்த ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

(வவுனியா)

வடமாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தத்தினால் அழிந்துபோன பிரதேசங்களை புனரமைக்கும் பணிகளில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். இது அரசியல் வேலைத்திட்டம் இல்லை. மனிதாபிமான வேலைத்திட்டமே என ஜனாதிபதியின் பேச்சாளரும் மீள் குடியேற்ற புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் பணிப்பாளர் நாயகமுமான ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று வவுனியாவில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க அதிபர்கள் வடக்கு கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட இக்கலந்துரையாடல் வவுனியா அரச விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சியில் இருந்து வருகை தந்த விடுதலைப்புலிகளின் நிர்வாகப்பொறுப்பாளர் உட்பட பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், புனர்வாழ்வுக்கான முயற்சியானது அரசியல் சம்பந்தப்பட்டது அல்ல.அது இருபது வருட இன முரண்பாட்டு மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிவாரணம் மற்றும் வாழ்க்கை மேம்பாட்டுடன் தொடர்புபட்டது.

தொடரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று நிலைத்திருக்க வேண்டும்.



அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும்.

இம்முயற்சிக்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பும் உதவியும் முக்கியமாகத் தேவைப் படுகின்றது. அவர்களும் தங்கள பங்களிப்பை வழங்கி வருவது மகிழ்ச்சிக்குரியதே. 20 வருடங் களாக ஏற்பட்ட அழிவு களை இரண்டு வருடங்களில் நிவர்த்தி செய்துவிட முடியாது அது கடினமான பணி என எல்லோருக்கும் தெரியும். எங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்து 6 மாதங்களே ஆகின்றன.

புனர்வாழ்வுக்குத்தேவையான வழங்கலும் அரிதாகவே காணப்படுகின்றது. அப்படிக்காணப்பட்ட போதும் முன்னரிலும் பார்க்க கூடியஅளவு பணிகளை நாங்கள் மேற்கொள்ள முடியும்.

அதற்கான முயற்சிகளில் நாங்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறோம். புதிய அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தில் முன்னரிலும் பார்க்க கூடிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-121)

## யாழ். நகரப்பகுதியில்

# இருவேறு விபத்துக்களில் பெண்கள் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டை அண்டிய பகுதிகளில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற இருவேறு வாகன விபத்துக்களில் இரு பெண்கள் படுகாயமடைந்து யாழ. போதனாவைத்திய சாலையில் அனுமதிககப்பட்டுள்ளனர். ஆட்டோவும் துவிச்சககரவண்டியும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற இளம் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். இவ் விபத்து நல்லூர் ஆடியபாதம்வீதியில் இடம் பெற்றுள்ளது. இதன்போது திருநெல்வேலியைச் சேர்ந்த சந்திர சேகரம் தர்சினி (வயது-20)என்பவர் படுகாயம டைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை, ஆரியகுளம் சந்தியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவரை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இதன் போது கோப்பாயைச் சேர்ந்த இராசவரோதயம் சற்குணதேவி (வயது-42) என்பவர் படுகாயமடைந்த நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-19)

## இராசிபலன்

**13.11.2004 (ஐப்பசி 28, சனிக்கிழமை)**

**பிரதமை முன்னிரவு 6.50மணிவரை**

**விசாகம் மு.ப. 8.32 மணிவரை**

**இராகுகாலம் 9.07-10.37 மணிவரை**

**சுபநேரம் 3.07- 4.37 மணிவரை**

**கந்தசஷ்டி விரதம் ஆரம்பம்**

**மேடம்** *அமைதிக்குறைவு, எதிர்பாராத பிரச்சினை, காரியதாமதம், வேலைப்பளு.*

**இடபம்** *எடுத்தகாரியம் கைகூடும், தெய்வ சிந்தை, விருந்துபசாரம், நல்லசெய்தி.*

**மிதுனம்** *தேகாரோக்கியம், மனமகிழ்ச்சி, முயற்சிகைகூடும், நண்பர்கள் சந்திப்பு.*

**கடகம்** *குடும்பக்கவலை, பணக்குறைவு, ஆரோக்கியக்குறைவு, காரியதாமதம்.*

**சிங்கம்** *மாதாசுகம், முயற்சிதாமதம், புதிய விடயம் அறிவித்தல், மனச்சோர்வு.*

**கன்னி** *கூட்டுமுயற்சி, உறவினர் வருகை, பணவருவாய், கீர்த்தி.*

**துலாம்** *விவாதம், பணவிரயம், காரிய தாமதம், கோபப்படுதல்.*

**விருச்சிகம்** *தெய்வ சிந்தை, உறவினர் சந்திப்பு, நல்லசெய்தி, புதிய முயற்சி.*

**தனுசு** *இடமாற்றம், திடீர் நன்மை, சுப செலவு, அமைதிக் குறைவு.*

**மகரம்** *பெருமையடைதல், போசன நன்மை, கலந்துரையாடல், தெய்வசிந்தை.*

**கும்பம்** *அதிகாரம், நல்லமுயற்சி, பெரியோர் சந்திப்பு, முயற்சி கைகூடும்.*

**மீனம்** *புதிய திட்மிடல், பிதாசிந்தை. பிரயாணம், காரிய தாமதம்.*

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

அவன்

## இஸ்லாமியத் தலைவர்கள் ஊடாக

# தினேஷின் விடுதலைக்கு அழுத்தம்

(கொழும்பு)

ஈராக்கிய தீவிரவாதிகளினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஷ் தர்மேந்திரா ராஜரத்தினத்தின் விடுதலைக்காக குவைத் இஸ்லாமியத் தலைவர்கள் ஊடாக அழுத்தம் கொடுக்கப்படவிருப்பதாக இலங்கை வெளிவிவகார பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், புனித றம்ழான் பண்டிகைக்காலம் என்பதால் இவ்விவகாரத்தில் சாதகமான முடிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொழில் புரிந்த நிறுவன நிர்வாகியான யசீர் முஸ்தபா புதாஹரியும் இவரது விடுதலை தொடர்பாக ஆர்வம் செலுத்திவருகின்றார்.

குவைத்தில் உள்ள ஆன்மீகத் தலைவரான அல் ஷேக்ஹரேக் அல்தாரி ஊடாக அவரது விடுதலைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குவைத்திற்கான இலங்கைத் தூதுவரும் பங்களாதேஷ் தூதுவரும் இராஜதந்திர ரீதியில் தமது நாட்டுப் பிரஜைகளை மீட்பதற்கு கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# மண் கடத்தியோருக்கு அபராதம் விதிப்பு

(பருத்தித்துறை)

மண் கடத்தலில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள் இருவருக்கும் லொறிச்சாரதி ஒருவருக்கும் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முப்பதாயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளார்.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டதுடன் மண்ணும பறிமுதல் செய்யப்பட்டது.

லொறிக்குரிய ஆவணங்கள் ஒப்படைக்கப்படும் வரை லொறியை நீதிமன்றத்தில் தடுத்து வைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி மாணவர்கள் இருவரும் மந்துவில் கொடிகாமத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் தொழில்புரிபவரின் பிள்ளைகளுக்கு விரைவில் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்?

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரிந்துவரும் இலங்கையரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 2004ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, 2003ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொது தராதர சாதரணம் மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள் வழுங்கப்பட வுள்ளது.

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி முதல் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பிள்ளைகளுக்கு 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில்களும்,

2001ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2003ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரணம் மற்றும் உயர்தரப்பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைவதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-61)

## மாதர் சங்கத்திற்கு நிதியுதவி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு இறுப்பிட்டி சிவலைப்பிட்டி மாதர் அபிவிருதிச் சங்கத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் கஜேந்திரகுமார் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி பண்ணை வேலை, கயிறு திரித்தல் உட்பட சிறு கைத் தொழில் பணிகள் போன்ற பயிற்சிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சிவலைப்பிட்டி மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி வசந்தகுமார் ராதா தெரிவித்திருக்கிறார்.

(ப-126)

# சமாதானம் பற்றிய சாதகமான முடிவை மாவீரர் தின உரையில் பிரபா அறிவிப்பார்

## சொல்ஹெய்மை சந்தித்தபின் ஹக்கீம் நம்பிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இவ்வருடம் மாவீர்தின உரையின் போது சமாதானம் தொடர்பாக சாதகமான சமிஞ்சை ஒன்றை வெளிப்படுத்துவார் என்று தாங்கள் கருதுவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூவர் எரிக்செல்ஹெய்மை கடந்த புதன்கிழமை சந்தித்துப் பேசியபின் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; நோர்வே அனுசரணையாளர்களின் வருகை மூலம் தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும், விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது. இருந்த போதும் பேச்சு வார்த்தைகள் எப்போது ஆரம்பிக்கும் என்ற உத்தர வாதம் தரக்கூடிய நிலையில் எவரும் இல்லை.

அதேவேளை பேச்சுக்களை ஆரம்பிக்கும் விடயத்தில் அரசாங்கம் பிளவு பட்டுள்ளது. அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையே காணப்படும் பிளவுகள் முரண்பாடுகள் என்பன் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதில் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன.

அதேவேளை, பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்கள் தனித்தரப்பாகப் பங்குபற்றும் வகையில்



சகல முஸ்லிம் கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய முஸ்லிம் தூதுக்குழு வொன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையில் ஏற்பாடு செய்யப்படும் என்றும் கூறியுள்ளார். (ந-08)

## கோப்பாய் தெற்கு கொலைவழக்கு யாழ்.மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பழைய தபாற்கந்தோர் வீதி, கோப்பாய் தெற்கு பகுதியில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் கணவன் மனைவிக்கு இடையே இடம்பெற்ற வாக்கு வாதத்தின் பின்னர் கணவரான இராமக்குட்டி செல்லத்தம்பி என்பவருக்கு ரீப்பர் தடியினாலும், மண்வெட்டிப் பிடியினாலும் மனைவி தலையில் தாக்கிக் காயப்படுத்தியமை காரணமாக யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி நபர் மரணமானார்.

மேற்படி நபர் தொடர்பான வழக்கின் சுருக்க முறையற்ற விசாரணை யாழ்ப்பாணம் நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் தொடர்ச்சியாக பல தடவைகள் இடம்பெற்றது.

இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களான கந்தசாமி சுதாகரன், செல்லத்தம்பி பாலாம்பாள், (இறந்தவரின் மனைவி) ஆகியோரை விளக்கத்திற்கு உட்படுத்துவதற்கு போதிய சான்றுகள் உள்ளதாக மன்று திருப்திப்பட்டுள்ளதால், குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் சட்டத் தரணி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சார்பில் சாட்சிகளைத் தேவைப்படின் யாழ்.மேல் நீதிமன்றில் அழைப்பதாக தெரிவித்வித்துள்ளார்.

இந்நிலையில் இவ் வழக்கேடு அண்மையில் யாழ்.மேல் நீதிமனறத்திற்கு பாரப்படுத்தப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இருவரும் தற்போது யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## தினேஷை விடுவிக்குமாறு அஷ்ரப் காங்கிரஸ் கோரிக்கை

(கொழும்பு)

ஈராக் தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுவிக்குமாறு அஷ்ரப் காங்கிரஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் கோரிக்கை கட்டாரிலுள்ள 'அல்-ஜசீரா' தொலைக்காட்சிக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் ஈராக்கிற்கும் இலங்கைக்குமிடையிலான நட்புறவு மற்றும் ஐ.நா.பொதுச் சபைக்கூட்டத்தில் ஈராக்கிற்கு இலங்கை படை வீரர்கள் அனுப்பி வைக்கப்பட மாட்டார் என இலங்கை ஜனாதிபதி குறிப்பிட்டது போன்ற விடயங்கள் நினைவுபடுத்தப்பட்டுள்ளன.

புனித ரம்ழானுக்கு முன்னதாக இவரை விடுதலை செய்யுமாறு அஷ்ரப் காங்கிரஸ் தவிசாளர் அல்ஹாஜ் எஸ்.சுபைதீன் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ந)

## ஈழத்தமிழர் நலனுக்கு எதிராக இந்தியா செயற்படப்போவதில்லை

### வை.கோவிடம் பிரதமர் மன்மோகன்சிங் உறுதி

(புதுடில்லி)

ஈழத்தமிழர்களின் நலன்களுக்கெதிராகவோ அல்லது அவர்களின்



சுதந்திரத்துக்கு எதிராகவோ இந்தியா செயற்படமாட்டாது என இந்திய பிரதமர் மன்மோகன்சிங் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கு இடையில் உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துமென இந்திய ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வை.கோபாலசாமி பிரதமர் மன்மோகன்சிங்கிடம் முறையிட்டிருந்தார்.

இதுதொடர்பாக வை.கோபாலசாமி இந்தியப் பிரதமருடன் கடந்த புதன்கிழமை புதுடில்லியில் சந்தித்து அரைமணி நேரம் வரை பேச்சுவார்த்தை நடாத்தினார்.

தடைப்பட்டுப் போயுள்ள இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர வேண்டும் என்பது இந்தியா உறுதியாகவும் ஆணித்தரமாகவும் உள்ளது. இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் தற்போதைய சமாதான முயற்சிகள் பாதிக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

பாதுகாப்பு ஒப்பந்தத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதில் முழுக்கவனம் செலுத்தப்படும் என பிரதமர் உறுதிப்படத் தெரிவித்ததாக வைக்கோ தெரிவித்தார்.

அதேவேளை, அண்மையில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க புதுடில்லி வந்திருந்தபோது இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்வதற்கு முயன்றிருந்தார். எனினும் இறுதி நேரத்தில் அது கைகூடவில்லை. இலங்கை விவகாரத்தில் இந்தியா ஒரு வரலாற்றுத்தவறை இனிமேலும் செய்யாது என தான் நம்புவதாகவும் வைக்கோ கூறினார். (ச-121)

## இரண்டுகோடி ரூபா பெறுமதியான செல்லிடத் தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 2 கோடி ரூபா பெறுமதியான செல்லிடத்தொலைபேசிகளை இலங்கை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்தத்தொலைபேசிகள் அனைத்தும் சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளி லிருந்து தபால் பொதிமூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்ததாக சுங்கத்திணைக்களத்தின் வருமானப் பரிசோதகர் படையணியின் அத்தியட்சகர் சிசிர டி சில்வா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. சுமார் 13 தபால் பொதிகளில் 3 ஆயிரத்து 800 செல்லிடத் தொலைபேசிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இவற்றைப் பொறுப்பெடுப்பதற்கு இதுவரை எவரும் முன்வரவில்லையென்று சுங்கத்திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார். (ந-121)

# விலைவாசி உயர்வைக் கண்டித்து கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மேல்மாகாண மக்கள் முன்னணி கடந்த புதன்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்ளது

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவரும் ஐக்கியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனின் தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

எரிபொருட்கள், சமையல் எரிவாயு மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் அதிகரித்த விலைகளைக் குறைக்க வேண்டுமென்றும், ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்க வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர். வலியுறுத்தினர்.

அத்துடன், நாட்டில் விரைவில் நிரந்தர சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் இதன்போது கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில் முடிவில் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்சவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

இவ் ஆர்ப்பாட்டம் தொடர்பில் கருத்துவெளியிட மனோகணேசன்,

நாட்டில் மக்கள் பட்டினியால் தவிக்கும் போது அரசாங்கமோ அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து தீவிரமாக யோசித்து வருகின்றது எனக் குற்றஞ்சாட்டினார். (ந-8)

## சம்பள முரண்பாடுகளை நீக்கக்கோரி சுகாதார ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவை ஊழியர்கள் கடந்த புதன்கிழமை வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் பணிமனைக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு மற்றும் அப்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

நீண்டகாலமாக சுகாதார ஊழியர்கள் மத்தியில் நிலவிவரும். சம்பள முரண்பாடுகளையும் ஏனைய குறைபாடுகளையும் நீக்குமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கைகளை முன்வைத்து சுகாதார ஊழியர்கள் கடந்த முதலாம் திகதியும் 9ஆம் திகதியும் சுகவீன லீவுப்போராட்டத்தை நடத்திய போதிலும், இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாததன் காரணமாகவே இவ் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாக வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவை ஊழியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கூறினார். (ந-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் எல்லையில் நிலைகொண்டுள்ள
# இந்திய படைகளை குறைக்க உத்தரவு



(புதுடில்லி)

காஷ்மீர் எல்லையிலுள்ள இந்தியப் படைகளின் எண்ணிக்கையை குறைக்க பிரதமர் மன்மோகன்சிங் உத்தரவிட்டு இருக்கிறார்.

காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தான தீவிரவாதிகள் ஊடுருவல் அதிகரித்ததைத் தொடர்ந்தும் பாகிஸ்தான் இராணுவம் எல்லையில் அடிக்கடி தாக்குதல் நடத்தியதாலும் எல்லைப் பகுதியில் பதட்டம் நிலவி வந்தது. இதையடுத்து எல்லைப்பகுதியில இந்திய இராணுவத்தினர் அதிகளவில் அனுப்பி வைக்கப்பட்டனர். கண்காணிப்பும் தீவிரப்படுத்தப்படடது.

இநத நிலையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே சமரச முயற்சிகளும் தொடர்ந்து நடைபெற்றன. இருநாடுகளுக்கும் இடையே விமான, பஸ் போக்குவரத்தும் மீண்டும் தொடங்கியது.


இந்த சமரச முயறசியின இன்னொரு பகுதியாக காஷ்மீர் எல்லையில் அதிகளவில் குவிக்கப்பட்டுள்ள படைகளை வாபஸ் பெற உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புத்துறைக்கான மத்திய அமைச்சரவைக் குழு கூட்டம் பிரதமர் மன்மோகன்சிங் தலைமையில் நேற்று டில்லியில் நடந்தது. இந்தக் கூட்டத்தில எல்லையில் உள்ள இந்தியப் படைகளின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

கூட்ட முடிவுக்குப பிறகு பிரதமர் மன்மோகன்சிங் படைகளின் எணணிககையைக் குறைக்கும் உத்தரவை வெளியிட்டார்.

காஷ்மீா எல்லையில் இப்போது பாதுகாப்பு நிலை மேம்பட்டு இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எல்லையில் இந்திய இராணுவத்தினர் எண்ணிக்கையைக் குறைக்கும் இந்த முடிவை பாகிஸதான் வரவேறறுள்ளது. அமைதி முயற்சியை இது மேலும் ஊக்குவிக்கும் என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. (ப)



அரசு முறை பயணமாக டில்லி வந்துள்ள டென்மார்க் நாட்டு இளவரசி அலெக்சாண்ட்ராவை பள்ளி மாணவிகள் வரவேற்றனர்.

# ரஷ்ய ஹோட்டலில் தீ விபத்து
# 25பேர் பலி 33 பேர் படுகாயம்

(மாஸ்கோ)

ரஷ்யாவில் சைபீரியப் பகுதியிலுள்ள கிசைல் என்ற இடத்தல் ஒரு ஹொட்டலில் நேற்று முன்தினம் இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த தீவிபத்தில் ஹொடடலில் தங்கியிருந்த ஊழியர்கள் 25பேர் உடல் கருகிப் பலியாகினர். 33பேர் படுகாயமடைந்தனர்.

விபத்தின் போது இந்த ஹொட்டலில் 136பேர் தங்கியிருந்தனர். நூற்றுக்கும் அதிகமானவர்களை தீயணைப்புத் துறையினரும், மீட்புப் படையினரும் மீட்டுள்ளனர். குழந்தைகள், பெண்கள் உட்பட 33பேர் இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். பதினைந்துக்கும் அதிகமான தீயணைப்பு வண்டிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

தீயணைப்பு வண்டியில் இருந்த தண்ணீர் கடுங்குளிரில் உறைந்து விட்டதால, தீயை அணைப்பதில் சிரமம் ஏற்படடது. இத்தீவிபத்தால் ஹொட்டலின இரண்டு அடுக்குமாடி நொறுங்கி விழுந்துள்ளது.

எனவே, விபத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும என எதிர்பார்க்கப்படுகிறது. விபத்து குறித்து விசாரிக்க குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. (ப)

# பலூஜாவில் கடும் சண்டை

ஈராக தீவிரவாதிகளின் கோட்டை என்று கருதப்படும் பலூஜா நகரைச் சுற்றி வளைத்துள்ள அமெரிக்க, ஈராக் அரசுப் படைகளுக்கு எதிராக அங்கு பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதையடுத்து இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை மூண்டுள்ளது.

பலூஜா நகரில் முக்கிய காவல் நிலையத்தையும் மேஜர் அலுவலகத்தையும் அமெரிக்க, ஈராக் படைகள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளன. ஆனால் நகரின் மையப்பகுதிக்குச் செல்ல முற்பட்ட அமெரிக்கப் படைகள் மீது தீவிரவாதிகள் கடும் தாக்குதல்நடத்தி வருவதாக பி.பி.சி செய்தி கூறுகிறது.

ஈராக் தீவிரவாதிகளின் தாக்குதலையடுத்து தங்களது பதில் தாக்குதலை தவிரப்படுததியுள்ள அமெரிக்க படைகளின் துணைத் தளபதி தாமஸ் மெட்ஸ், அவசியம் நேரிட்டால் தாங்கள் நடத்திவரும் தாக்குதலை மேலும் தீவிரப்படுத்தப் போவதாக எச்சரித்துள்ளார்.

தொடர்ந்து அமெரிகக போர் வமானங்கள் தாக்குதல்நடத்தன. பலூஜா நகரின் மீது அமரிக்கப் படைகள் நடத்தியுள்ள தாக்குதலில் இதுவரை அமொிக்க வீரர்களும் ஈராக் வீரர்களும் உயிரிழந்துள்ளதாக அமெரிகக இராணுவம் தெரிவிததுளளது.

பலூஜா மது தங்களுடைய பிடியை அமெரிக்க ஈராக் படைகள் இறுக்கிவரும அதேவேளையில் ஈராக்கின் மற்ற பகுதிகளில் அமெரிக்கப் படைகளின் மீது தங்களுடைய தாக்குதலை ஈராக் தீவிர வாதிகள் தீவிரப்படுத்தி வருகின்றனர். (ப)

WORLD NEWS உலக தரிசனம்

# உலகத் தலைவர்களுடன் யஸீர் அரபாத்



முன்னாள் இந்திய பிரதமர் வாஜ்பாயுடன் அரபாத்



போப்பாண்டவருடன் அரபாத்



ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேனுடன் அரபாத்



ரஷ்ய அதிபர் புடினுடன் அரபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் பார்வை

# ஈழத் தமிழர் இறைமை

அத்தியாயம்-4
தொடர் -III

மு. திருச்செல்வம்

அரசியலமைப்பின் தன்மை, குடியுரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் என்பனபற்றி நாம் பல திருத்தங்களை முன்மொழிந்தோம். எமது திருத்த முன்மொழிவுகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டன.

...வரப்போகிற புதிய அரசியலமைப்பில் எமது மொழி உரிமைகள் திருப்திகரமாக உள்ளடக்கப்படவில்லை. எனவே நாம் இந்த அவையின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதால் எவ்வித பயனுள்ள தேவையும் நிறைவு செய்யப்படாது என மனநோவுடன் முடிவு செய்துள்ளோம்.

"....இன்று சபை ஒத்திவைக்கப்படும் பொழுது அவையை விட்டுச் செல்லும் நாம், மீண்டும் அவைக்கு வரமாட்டோம்."

1971ஜூன் 28 ஆம் நாள் அரசியலமைப்பு யாக்க அவையில் மூதறிஞர் செல்வநாயகம் ஆற்றிய கடைசி உரையிலிருந்து சிலவரிகளைத் தந்துள்ளேன்.

இதற்குப் பின்பு தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அரசியலமைப்பு யாக்க அவைக்குச் செல்லவில்லை.

## புதிய அரசியலமைப்பு

1970 ஜூலை 19 ஆம் நாள் தொடக்கம், 1971ஜூன் 28 ஆம் நாள் வரை தமிழரசுக் கட்சியினர் அரசியலமைப்பு யாக்க அவையில் ஈடுபட்டுப் பணிபுரிந்தனர். பின்னர் தமிழரசுக் கட்சியினர் பகிஷ்கரித்ததையும் பொருட்படுத்தாமல் அரசியலமைப்பு யாக்க அவை தொடர்ந்தும் செயற்பட்டது.

1972 மே 22 ஆம் நாள் புதிய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. தயாரிக்கப்பட்ட அரசியலமைப்பின் முதற் பிரதியில் அந்நாள் காலை அரசியலமைப்பு யாக்க அவைத் தலைவர் வன்னியாராச்சிகே டொன் ஸ்டான்லி திலக்ரத்னா சம்பிரதாய பூர்வமாகத் தனது ஒப்புதல் கையெழுத்தை வைத்தார்.

இலங்கை, குடியரசாக மலர்ந்தது. பிரிட்டிஷ் அரசுடன் கொண்ட ஆட்சித் தொடர்புகள் முற்றாக அறுக்கப்பட்டன. ஒருதலைப்பட்சமான முயற்சியால் முறிக்கப்பட்டன.

1948-இல் பிரிட்டிஷார் ஆட்சிப் பொறுப்பை வழங்கினர். அப்பொழுது வந்த சோல்பரி அரசியலமைப்புத் தூக்கி எறியப்பட்டது. சட்டப்புரட்சி மூலம் தூக்கியெறியப்பட்டது. 1948-இன் சோல்பரி அரசியலமைப்புச் சட்டம் வலுவிழந்தது. வரலாற்றுச் சின்னமாக மாறியது.

## இசைவு

மக்களாட்சி என்றால் மக்களால் மக்களுக்காக நடைபெறும் ஆட்சியே. மக்களின் குடியுரிமையை மக்களின் ஆட்சியுரிமையை மக்களிடமுள்ள இறைமையை ஏற்று மக்களின் அதிகாரம் பெற்று அமைவதே மக்களாட்சிக் குடியரசு.

இலங்கை மக்களின் அரசியலமைப்பு இலங்கை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியலமைப்பு யாக்க அவை இலங்கை மக்களின் அதிகார வலுவுடைய அரசியலமைப்பு யாக்க அவை என்றும் பிறவுமாகப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அரசியலமைப்பு யாக்க அவைத் தொடக்க நாள் கூட்டத்தில் கூறியிருந்தார்.

சட்டத் தொடர்பில்லாத அரசியலமைப்பு யாக்க அவை அமைக்கப்படுவதற்கு ஆற்றலுரிமை தாருங்கள் என 1970 ஆம் ஆண்டு தேர்தலில் மூன்று கட்சிகளின் கூட்டு முன்னணி இலங்கை மக்களுள் ஒரு நாட்டினமான தமிழ் மக்களையும் கேட்டது. தமிழர்களைத் தனது வேட்பாளர்களாகச் சில தமிழ்த் தேர்தல் தொகுதிகளில் நிறுத்தியிருந்தது. இவர்களுள் ஒருவேட்பாளரைக் கூட தமிழ் மக்கள் தெரிவுசெய்யவில்லை. சட்டத் தொடர்பில்லா அரசியலமைப்பு யாக்க அவை அமைப்பதற்கு தமிழர் இசைவு கொடுக்கவில்லை. ஒப்புதல் வழங்கவில்லை.

தேர்தலில் சிங்கள மக்கள் பெரும்பான்மையான வேட்பாளர்களை ஒரே அணியில் தெரிவு செய்து அரசியல் மாற்றத்தை முன்மொழிந்துள்ளார்கள்.

எனவே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சனப் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களும் அரசியல் யதார்த்த நிலையை உணர்ந்து அரசியலமைப்பு யாக்க அவைக் கூட்டங்களுக்குச் சென்றார்கள். தமிழ் மக்களின் அடிப்படைக்கோரிக்கைகளை, ஆகக்குறைந்த அரசியல் கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

இந்த அடிப்படைக் கோரிக்கைகளை, ஆகக்குறைந்த ஏற்பாடுகளை சிங்கள மக்களின் பிரதிநிதிகள் அனைவரும் கட்சி வேறுபாடின்றிக் கூட்டாகச்சேர்ந்து எதிர்த்து நிராகரித்தார்கள். தமிழரசுக்கட்சி மட்டுமல்ல தமிழர்கள் நலம்பேண் அரசியல் கட்சிகள் நான்கும் கூட்டாகச்சேர்ந்து முன்வைத்த கோரிக்கைகளைச் சிங்கள மக்களின் நலன் பேண் கட்சிகள் நிராகரித்தனர்.

இதனால் தமிழ் உறுப்பினர்களுட் பெரும்பான்மையானோர் அரசியலமைப்பு யாக்க அவையில் இருந்து வெியேறினார்கள். தொடர்ந்தும் அங்கு இருப்பதால் பயனில்லை எனக் கருதினார்கள்.

மக்களால் குடியரசாக இலங்கையை மாற்றும் முயற்சிக்கு இலங்கை மக்களின் அதிகாரம் இயைபு ஒப்புதல் என்பன பெறவேண்டும் எனில், இலங்கையில் உள்ள இரு வேறு நாட்டினங்களிடமும் பெறவேண்டும். எந்த நாட்டு மக்களுக்காக அரசியலமைப்பு உருவாக்கப்படுகின்றதோ அந்த நாட்டு மக்கள் இசைவு கொடுத்த பின்தான் அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்க மாநிலங்களின் அரசியலமைப்பு அங்குள்ள மாநிலங்களின் இசைவுடன் எழுந்த அரசியலமைப்பே. கானா நாட்டில் அரசியலமைப்பு பொதுமக்கள் வாக்குக் கணிப்பு மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சூடானில் அரசியலமைப்பு யாக்க அவை மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஏற்கனவே பார்த்தோம். இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் அரசியலமைப்பு யாக்க அவைகள் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டன. நாடு பிரிக்கப்பட முன் தெரிவு செய்யப்பட்ட அரசியல் அமைப்பு யாக்க அவையில் முஸ்லிம் லீக் கலந்து கொள்ள மறுத்தது. முஸ்லிம்களின் இசைவைப்பெறாத மக்கள் தொகையின் நான்கில் ஒரு பங்கினரின் இசைவைப்பெறாத அரசியல் அமைப்பு பயனற்றது என்பதால் பிரிட்டிஷார் பிரிவினைக்கு இசைந்தனர்.

இந்தியாவின் அரசியலமைப்பு யாக்க அவையில் தமிழ்நாட்டு பிரதிநிதிகள் இருந்தனர். இவர்கள் அவையைப் புறக்கணிக்காது அவையுடன் சேர்ந்து பணிபுரிந்தனர். இதனால் இந்திய அரசியலமைப்புத் தமிழ்நாட்டவரின் இசைவுடன் எழுந்த அரசியலமைப்பு என்பதையும் ஏற்கனவே பார்த்தோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் துளிகள்

## இலவச ஜீவாகாரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட குழந்தைகள் மகப்பேற்று நிலையங்களில் சிகிச்சை பெற்றுவரும், தாய்மாருக்கும் குழந்தைகளுக்கும் நல்லூர் பிரதேசசபையினால் இலவசமாக ஜீவாகாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

ஜீவாகாரத்தை இதுவரை பெறாதவர்கள் மேற்படி நிலையங்களில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் கேட்டுள்ளார். (ற-5)

## புதிய வகுப்பறை நிர்மாணிப்பு

(பருத்தித்துறை)

நிக்கொட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் வட- மத்திய மகளிர் கல்லூரியில் சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் மாடிக்கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (க-52)

## கண்ணிவெடிகள் அழிப்பு

(பொலிகண்டி)

டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால், குப்பிளான் ஏழாலை மற்றும் மல்லாகம் போன்ற இடங்களில் எடுக்கப்பட்ட 310 கண்ணிவெடிகள் கடந்த புதன்கிழமை காலை வெடிக்க வைக்கப்பட்டன. குப்பிளானில் அமைந்துள்ள ஆயுதம் அழிக்கும் குழியில் வைத்து அவை வெடிக்க வைக்கப்பட்டன. (ச-10

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

தென்மராட்சி- கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், நெறியாளர் சபைக் கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-49)

## "தேனரும்பு" சஞ்சிகை வெளியீடு

(பொன்னாலை)

புனித மருத்தீனார் குருமட மாணவர்களால் வருடாந்தம் வெளியிடப்பட்டுவரும் 'தேனரும்பு' கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக் கிழமை அருட்பணி அதிபர் கிருபாகரன் தலைமையில் குருமட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மருத்தீனார் பெருநாள் நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-49)

## மானியத்தொகை வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு மத்திய போக்குவரத்துச் சபையினால் வழங்கப்படும் மானியத்தொகை இன்னமும் வழங்கப்படாமையினால் போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை வழங்குவதில் பெரும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரியவருகின்றது.

மத்திய போக்குவரத்துச்சபையினால் வழங்கப்படும் மானியத் தொகை கோண்டாவில், மன்னார் சாலைகளைத் தவிர நாட்டிலுள்ள அனைத்துச் சாலைகளுக்கும் வழங்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகின்றது. (ற-16)

## கலந்துரையாடல்

வடமராட்சி தெற்கு,மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் அரசியல் துறையினரும் சமூகமளிக்கவுள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (ப-101)

## புனரமைப்பு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவு சமுர்த்தி அதிகாரசபையின் மக்கள் கருத்திட்டத்தின் கீழ் காரைநகர் வட கிழக்கின் சேவகர் கோவில் வீதியும், காரைநகர் தெற்கில் பாலாவோடை பொதுக் கிணறு ஒன்றும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

சுமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இக்கருத்திட்டங்கள அடுத்த வாரமளவில் நிறைவுற்றுவிடுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-246)

★ ★ ★

மந்துவில் கிழக்கு பிரம்படி வீதி உலக வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மந்துவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக இது புனரமைக்கப்பட்டு வருகிறது. (ப-54)

★ ★ ★

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஐந்து குளங்கள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளது.

புலோப்பளை கிழக்கு முடிக்கப்பல்லக்குளம், இத்தாவில் பெரியகுளம், கோவில் வயல் பெரிய குளம், சோரன்பற்று சீராவிக் குளம் மற்றும் சோரன்பற்று மன்னகுண்ட குளம் ஆகிய குளங்களே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

இப் புனரமைப்பு வேலைகளில் பங்கேற்ற விவசாயிகளுக்கு உலக உணவு நிறுவனம் உலர் உணவு பொருட்களை வழங்கியுள்ளது. (ப-35)

## மீள்குடியமர்வு கொடுப்பனவு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு இதுவரை கிடைக்காத மக்களுக்கு இக்கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா மீளக்குடியமர்வுக் கொடுப்பனவை மருதங்கேணி சமுர்த்திச் சங்க வங்கி வழங்கவுள்ளது. (ப-35)

## கருத்தரங்கு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள முன்பள்ளி மாணவர்களின் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் கிராமங்கள் தோறும் நடாத்தப்பட்டு வருகின்றன.

இக்கருத்தரங்குகளை வடமராட்சி வலய முன்பள்ளி உதவிப் பணிப்பாளர் துரை சத்தியசீலன், புனர்வாழ்வு அதிகாரிகள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோா நடாத்தி வருகின்றனர். (ப-35)

## 10 ஆயிரம் பனம் விதைகள் நடுகை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் பெரும் தொகையான பனை மரங்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் அழிக்கப்பட்டுள்ளன.

இப்பனை மரங்களை ஈடு செய்யும் பொருட்டு வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல் துறையின் அனுசரணையுடன் வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினால் திக நிலங்களில் 10 ஆயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டுள்ளன. (ப-35)

## வீதிசேதம்

(தென்மராட்சி)

கோவிலாக்கண்டி துறைக்கும் கோவிலாக்கண்டி சந்திக்கும் இடையிலான வீதி தொடர் மழையினால் சிதைவடைந்துள்ளது.

இதனால் கோவிலாக்கண்டி துறையூர் மக்கள் கடும் சிரமத்தின் மத்தியில் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர். (ப-129)

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளப்பெறுவோர் -2004

240) வ/கி/2161 திரு.கணபதிப்பிள்ளைவேலுப்பிள்ளை
241) வ/கி/2175 திரு. சூசை குழந்தைச்சாமி
242) வ/கி/2176 திரு. சின்னத்தம்பி செல்லையா
243) வ/கி/2189 திரு. கந்தையா விசுவலிங்கம்
244) வ/கி/2191 திரு. சுப்பையா பெருமையினார்
245) வ/கி/2193 திரு. சூசைஉடையார் சவரிமுத்து
246) வ/கி/2201 திரு. நாகமணி சின்னத்துரை
247) வ/கி/2226 திரு. செல்லப்பா கந்தசாமி
248) வ/கி/2230 திரு.வைரமுத்துஇராமனாதி
249) வ/கி/2231 திருமதி.செல்லமுத்து ஐயம்பிள்ளை
250) வ/கி/2233 திரு. வேலுப்பிள்ளைகயிலாயபிள்ளை
251) வ/கி/2236 திரு. சிற்றம்பலம்தாமோதரம்பிள்ளை
252) வ/கி/2244 திருமதி. பாக்கியம் தம்பிஐயா
253) வ/கி/2255 திருமதி. அகிலாண்டம் ஆறுமுகம்
254) வ/கி/2276 திரு. வீரகத்தி கந்தசாமி
255) வ/கி/2277 திரு. தம்பையா சின்னையா
256) வ/கி/2292 திரு. வேலுப்பிள்ளை முருகேசு
257) வ/கி/2297 திருமதி.இராசம்மாகணபதிப்பிள்ளை
258) வ/கி/2299 திரு. சண்முகம் வீரகத்தி
259) வ/கி/2305 திரு. தம்பியப்பா பரஞ்சோதி
260) வ/கி/2308 திரு. சின்னத்தம்பி ஐயாத்துரை
261) வ/கி/2309 திரு. ஆறுமுகம் நடராசா
262) வ/கி/2316 திரு. தம்பு மயில்வாகனம்
263) வ/கி/2355 திரு. சின்னப்பு கணபதிப்பிள்ளை
264) வ/கி/2364 திரு. செல்லையா சுந்தரம்பிள்ளை
265) வ/கி/2370 திருமதி. அன்னபூரணம் நவரத்தினம்
266) வ/கி/2382 திரு. செல்லையா தருமலிங்கம்
267) வ/கி/2385 திரு. சம்பந்தர் புஸ்பநாதன்
268) வ/கி/2391 திரு. செல்லையா தருமலிங்கம்
269) வ/கி/2396 திரு. சிதம்பரப்பிள்ளை வேலாயுதம்
270) வ/கி/2399 திரு. மாணிக்கம் கிரு'ணன்
271) வ/கி/2403 திரு.வயிரமுத்துஅந்தோனிப்பிள்ளை
272) வ/கி/2417 திரு. செல்லையா முத்துலிங்கம்
273) வ/கி/2427 திரு. கார்த்திகேசு சாமிநாதன்
274) வ/கி/2436 திரு. கணபதிப்பிள்ளை சின்னத்துரை
275) வ/கி/2451 திரு. அறுமுகம் செல்லத்துரை
276) வ/கி/2461 திரு. ஆழ்வாப்பிள்ளை கணபதி
277) வ/கி/2470 திரு. கணபதிப்பிள்ளை கந்தர்
278) வ/கி/2474 திரு. கார்த்திகேசு சுப்பையா
279) வ/கி/2475 திரு. அருளம்பலம் சிவபாதசுந்தரம்
280) வ/கி/2479 திரு. சின்னையா பரமசிங்கம்
281) வ/கி/2485 திரு. செல்லப்பா கந்தையா
282) வ/கி/2488 திரு. காங்கேசு தம்பிஐயா
283) வ/கி/2510 திரு. கார்த்திகேசு நாகலிங்கம்
284) வ/கி/2519 திரு. வேலுப்பிள்ளை பேரம்பலம்
285) வ/கி/2520 திரு. முத்தையா அழகப்பர்
286) வ/கி/2541 திரு. கணபதி கதிரவேலு
287) வ/கி/2546 திருமதி. பூரணம் கந்தசாமி
288) வ/கி/2551 திருமதி. புவனேஸ்வரி பொன்னையா
289) வ/கி/2562 திரு. கதிர்காமு நாகநாதன்
290) வ/கி/2563 திருமதி. அன்னலட்சுமி தனிநாயகம்
291) வ/கி/2570 திரு. பொன்னையா வினாயகமூர்த்தி
292) வ/கி/2576 திருமதி. நல்லம்மா வேலுப்பிள்ளை
293) வ/கி/2591 திரு. தம்பு செல்வரத்தினம்
294) வ/கி/2592 திரு. சின்னத்தம்பி நடராசா
295) வ/கி/2600 திரு. வேலுப்பிள்ளை முருகேசு
296) வ/கி/2617 திரு. பொன்னம்பலம் நல்லையா
297) வ/கி/2619 திரு. செல்லையா கந்தசாமி
298) வ/கி/2628 திரு. கந்தையா கதிர்காமர்
299) வ/கி/2651 திரு. செல்லத்துரை அரசரத்தினம்
300) வ/கி/2662 திரு. வி.சின்னத்தம்பி வைத்திலிங்கம்
301) வ/கி/2663 திரு. அமரசிங்கம் ராசநாயகம்
302) வ/கி/2673 திருமதி. தெய்வாணைப்பிள்ளை இராமசாமி
303) வ/கி/2696 திரு. சின்னக்குட்டியர் தம்பிப்பிள்ளை
304) வ/கி/2719 திரு. கந்தையா குமாரசாமி
305) வ/கி/2722 திரு. மாணிக்கம் சேனாதிராசா
306) வ/கி/2742 திருமதி. அன்னமுத்து கனகரத்தினம்
307) வ/கி/2770 திரு. நாகப்பர் குமாரசாமி
308) வ/கி/2778 திருமதி. வடிவாம்பிகைஅம்மா பஞ்சாச்சரம்
309) வ/கி/2787 திரு. சங்கரப்பிள்ளை ஆறுமுகம்
310) வ/கி/2794 திரு. இலங்கையர் கனகசபை
311) வ/கி/2839 திரு. சவரிமுத்து அருள்
312) வ/கி/2851 திரு. செல்ல்லயா குமாரசாமி
313) வ/கி/2876 திரு. வீரப்பன் இராமன்
314) வ/கி/2895 திரு. வேலுப்பிள்ளை பேர்பாலசிங்கம்
315) வ/கி/2897 திருமதி. நாகம்மா வேதவனம்
316) வ/கி/2899 திரு. வல்லிபுரம் கந்தையா
317) வ/கி/2916 திரு. தம்பிப்பிள்ளை நடராசா
318) வ/கி/2924 திரு. இராமலிங்கம் வயித்திலிங்கம்
319) வ/கி/2930 திரு. பெரன்னுச்சாமி இராசரத்தினம்
320) வ/கி/2949 திரு. சின்னையா நடராசா
321) வ/கி/2953 திரு. வேலுப்பிள்ளை கணேசபிள்ளை
322) வ/கி/2956 திரு. சந்தியோகு ஞானப்பிரகாசம்
323) வ/கி/2957 திரு. கார்த்திகேசு துரைராசா
324) வ/கி/2985 திரு. கனகசபை சீவரத்தினம்
325) வ/கி/3003 திரு. செல்லப்பா நல்லையா
326) வ/கி/3021 திரு. பெருமாள் வேலுச்சாமி
327) வ/கி/3022 திருமதி. செபமாலை அந்தோனிப்பிள்ளை
328) வ/கி/3034 திருமதி. கமலம்மா ஆறுமுகம்
329) வ/கி/3046 திரு. நாகநாதன் செல்லத்துரை
330) வ/கி/3056 திரு. பரமாசிங்கம் ஏரம்பு
331) வ/கி/3060 திரு. குமார்சாமி பாலசிங்கம்
332) வ/கி/3075 திரு. நாகேந்திரர் வையித்தியநாதி
333) வ/கி/3091 திரு. நன்னித்தம்பி பொன்னம்பலம்
334) வ/கி/3093 திருமதி. அம்பிகாவதி சரவணமுத்து
335) வ/கி/3096 திரு. வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
336) வ/கி/3098 திரு. கணபதிப்பிள்ளை கிரு'ணபிள்ளை
337) வ/கி/3113 திரு. இளையதம்பி இராசையா
338) வ/கி/3120 திரு. கந்தையா வேலாயுதபிள்ளை
339) வ/கி/3146 திரு. முருகேசு தில்லையம்பலம்
340) வ/கி/3151 திரு. சூரியர் செல்லத்துரை
341) வ/கி/3171திரு. சிவக்கொழுந்து வல்லிபுரம்
342) வ/கி/3201திரு. சிதம்பரப்பிள்ளை காங்கேசு
343) வ/கி/3217திரு. சின்னத்தம்பி வேலுப்பிள்ளை
344) வ/கி/3232திரு. செல்லையா பரராசசிங்கம்
345) வ/கி/3234திருமதி. சங்குபதி பொன்னுத்துரை
346) வ/கி/3243திரு. சின்னத்துரை புஸ்பராசா
347) வ/கி/3259 திருமதி. கமலாம்பிகை குணசிங்கம்
348) வ/கி/3262 திரு. நீக்கிலான் கிறிஸ்தோப்பர்
349) வ/கி/3271 திரு. கிருஸ்ணபிள்ளை மார்க்கண்டு
350) வ/கி/3275 திரு. சின்னத்தம்பி அழகரத்தினம்
351) வ/கி/3277 திரு. வேலுப்பிள்ளை இராசையா
352) வ/கி/3288 திருமதி. குஞ்சுப்பிள்ளை கந்தர்
353) வ/கி/3294 திரு. இராமசாமி சரவணமுத்து
354) வ/கி/3322 திரு. கண்ணி செல்லத்தம்பி
355) வ/கி/3331 செல்வி. செல்லாச்சி வீரகத்தி
356) வ/கி/3333 திரு. சின்னத்துரை தவகுணபாலநாதன்
357) வ/கி/3365 திரு. வைத்திலிங்கம் குலசேகரம்பிள்ளை
358) வ/கி/3368 திருமதி. றோசம்மா அல்பிறற்
359) வ/கி/3386 திரு. இராசதுரை வல்லிபுரம்
360) வ/கி/3391 திரு. -செபஸ்தியான் அமுல்சாமி
361) வ/கி/3414 செல்வி. பாக்கியம் தம்பிப்பிள்ளை
362) வ/கி/3428 திரு. கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்
363) வ/கி/3441 திரு. வயித்தி பொன்னையா
364) வ/கி/3451 திரு. செல்லர் முருகர்
365) வ/கி/3467 திரு. மயிலு சோமு
366) வ/கி/3468 திருமதி. செல்லம்மா சண்முகம்
367) வ/கி/3477 திரு. முருகேசு மருதையினார்
368) வ/கி/3525 திரு. யோசெப் அந்தோனிப்பிள்ளை
369) வ/கி/3531 திரு. கணபதி சண்முகம்
370) வ/கி/3536 திருமதி. காசிப்பிள்ளை செல்லத்துரை
371) வ/கி/3537 திரு. வல்லிபுரம் கிரு'ணபிள்ளை
372) வ/கி/3543 செல்வி. தவயோகி பொன்னுச்சாமி
373) வ/கி/3573 திரு. சற்றம்பலம் பரமேஸ்வரன்

## வவுனியா மாவட்டம்

01) வ/வ/3 திரு. சின்னையா சந்திரசேகரம்'
02) வ/வ/6 திரு. கந்தையா சிவக்கொழுந்து
03) வ/வ/12 திரு. செல்லத்துரை கந்தையா
04) வ/வ/16 திரு. பரமு சிதம்பரப்பிள்ளை
05) வ/வ/19 திருமதி. அன்னலட்சுமி கதிரவேலு
06) வ/வ/28 திருமதி. மகேந்திரம் தளையசிங்கம்
07) வ/வ/29 திரு. வீரகத்தி கணபதிப்பிள்ளை
08) வ/வ/64 திரு. தருமலிங்கம் குலராசா
09) வ/வ/65 திரு. நல்லதம்பி தம்பிநாயகம்
10) வ/வ/72 திரு. நாகநாதி தருமலிங்கம்
11) வ/வ/74 திரு. இராமு பேரம்பலம்
12) வ/வ/89 திரு. தம்பிப்பிள்ளை பசுபதி
13) வ/வ/95 திரு. இராமுப்பிள்ளை குமாரையா
14) வ/வ/119 திரு. ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்
15) வ/வ/132 திரு. காசிப்பிள்ளை இரத்தினசிங்கம்
16) வ/வ/134 திரு. வீரவாகு நடராசா
17) வ/வ/136 திரு. அருணாசலம் கிருஸ்ணசாமி
18) வ/வ/139 திரு. வல்லிபுரம் பரராசசிங்கம்
19) வ/வ/147 திரு. வீரவாகு கணபதிப்பிள்ளை
20) வ/வ/155 திரு. ஆறுமுகம் தம்பிராசா
21) வ/வ/159 திரு. தம்பு மயில்வாகனம்
22) வ/வ/172 திரு. சுந்தரம்பிள்ளை சிவநேசலிங்கம்
23) வ/வ/188 திரு. சுப்பர் கந்தசாமி
24) வ/வ/194 திரு. கார்த்திகேசு நடராசா
25) வ/வ/201 திரு. கந்தையா தம்பிராஜா
26) வ/வ/210 திரு. சேதுப்பிள்ளை குமாரசாமி
27) வ/வ/213 திரு. வீரபாகு சுப்பிரமணியம்
28) வ/வ/216 திருமதி. மாரிமுத்து தர்மலிங்கம்
29) வ/வ/260 திரு. வீரவாகு செல்லையா
30) வ/வ/265 திரு. வல்லிபுரம் மகாதேவன்
31) வ/வ/277 திரு. பொன்னர் செல்லையா
32) வ/வ/279 திரு. வயிரமுத்து சிற்றம்பலம்
33) வ/வ/282 திரு. கார்த்திகேசு நாராயணபிள்ளை
34) வ/வ/287 திரு. நாகலிங்கம் கந்தையா
35) வ/வ/291 திரு. குமாரசாமி அருளம்பலம்
36) வ/வ/298 திரு. சுந்தரலிங்கம் புவனேஸ்வரன்
37) வ/வ/301 திரு. தனுக்கோடி நாகமுத்து
38) வ/வ/314 திரு. சரவணமுத்து வினாயமூர்த்தி
39) வ/வ/347 திரு. கந்தவனம் சோமசுந்தரம்
40) வ/வ/351 திரு. பெருமாள் முத்தையா
41) வ/வ/355 திரு. சோமநாதர் இரத்தினம்
42) வ/வ/361 திரு. பொன்னையா துரையப்பா
43) வ/வ/367 திருமதி. பதஞ்செல்வி பொன்னம்பலம்
44) வ/வ/374 திரு. நல்லதம்பி கயிலாயபிள்ளை
45) வ/வ/375 திரு. ஆறுமுகம் காசிப்பிள்ளை
46) வ/வ/376 திரு. அருணாசலம் செல்வராசா
47) வ/வ/380 திரு. பொன்னையா பரமு
48) வ/வ/402 திரு. செல்லையா குகதாசன்
49) வ/வ/430 திரு. வீரசிங்கம் சுப்பிரமணியம்
50) வ/வ/434 திருமதி. பிறிஜிற் அன்னம்மா பீற்றர்
51) வ/வ/439 திருமதி. சோதி கந்தையா
52) வ/வ/444 திரு. இராமு பொன்னுத்துரை
53) வ/வ/451 திரு. முத்தையா சிதம்பரப்பிள்ளை
54) வ/வ/454 திருமதி. மரியம்மா தம்பிராசா
55) வ/வ/459 திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
56) வ/வ/462 திரு. சின்னசாமி பழனிசாமி
57) வ/வ/463 திரு. பொன்னையா இராசநாயகம்
58) வ/வ/471 திரு. மாரிமுத்து முருகேசு
59) வ/வ/472 திரு. செல்லையா பத்மநாதன்
60) வ/வ/479 திரு. கனகன் காங்கேசு
61) வ/வ/496 திரு. செல்லையா மார்க்கண்டேயர்
62) வ/வ/522 திரு. இராயப்பு அந்தோனிப்பிள்ளை
63) வ/வ/535 திரு. பொன்னையா திருஞானசம்பந்தன்
64) வ/வ/549 திரு. பி சுப்பிரமணியம்
65) வ/வ/561 திரு. வன்னியசிங்கம் முத்தையா
66) வ/வ/566 திருமதி. நல்லம்மா மயில்வாகனம்
67) வ/வ/582 திரு. கனகர் நாகமணி
68) வ/வ/589திரு. கந்தசாமி சிவராசா
69) வ/வ/602 திரு. கந்தையா சிவஞானசுந்தரம்
70) வ/வ/634 திரு. கந்தன் ஞானப்பிரகாசம்
71) வ/வ/635 திரு. பொன்னையா சுப்பிரமணியம்
72) வ/வ/643 திரு. ஆறுமுகம் மயில்வாகனம்
73) வ/வ/668 திரு. சின்னமுத்து கருப்பையா
74) வ/வ/688 திரு. சபாபதி சூசைப்பிள்ளை
75) வ/வ/697 திரு. தம்பு இராசையா
76) வ/வ/704 திருமதி. சீவரத்தினம் சின்னத்துரை

## முல்லைத்தீவு மாவட்டம்

01) மு/18 திரு. கனகசுந்தரம் கனகரத்தினம்
02) மு/19 திரு. கணவதிப்பிள்ளை சுப்பிரமணியம்
03) மு/48 திருமதி. தங்கம்மா முருகுப்பிள்ளை
04) மு/53 திரு. சவரிமுத்து வரப்பிரகாசம்
05) மு/54 திரு. பிறன்சிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
06) மு/55 திருமதி. மேரிகிறேஸ் கணே'பூபன்
07) மு/63 திரு. யேமிஸ் பிரான்சீஸ் சேவியர்
08) மு/76 திரு. கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை
09) மு/97 திருமதி. செல்லம்மா கந்தசாமி
10) மு/110 திரு. திசராசசெல்வம் குணரட்ணம்
11) மு/134 திரு. இராசதுரை தங்கத்துரை
12) மு/143 திரு. சபாபதி நவரத்தினம்
13) மு/155 திரு. குமாரு கந்தையா
14) மு/181 திரு. இராஜசேகரர் வேகாவனம்
15) மு/187 திரு. நாகமணி சிவகுரு
16) மு/195 திரு. வேலு சின்னையா
17) மு/206 திரு. மாப்பாணர் சந்திரசேகரி
18) மு/210 திரு. கணபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
19) மு/215 திரு. செல்லையா சண்முகம்
20) மு/227 திரு. துரைச்சாமி பரராசசிங்கம்
21) மு/231 திரு. செல்லத்துரை சங்கரப்பிள்ளை
22) மு/233 திரு. நாகமுத்து செல்லத்துரை
23) மு/268 திரு. துரைச்சாமி சதாசிவம்
24) மு/284 திரு. ஆறுமுகம் நயினார்
25) மு/285 திரு. சின்னத்துரை கோபாலசிங்கம்
26) மு/294 திரு. கயிலாசபிள்ளை உடையார் இராமநாதன
27) மு/303 திரு. முருகன் கணபதிப்பிள்ளை
28) மு/310 திரு. சகாபதி அண்ணாமலை
29) மு/320 திரு. கந்தையா வல்லிபுரம்
30) மு/332 திரு. இளையவி வேலு
31) மு/333 திரு. பொன்னையா சபாரத்தினம்
32) மு/341 திரு. ஏரம்பு சின்னையா
33) மு/353 திரு. பொன்னையா முத்துராசா
34) மு/359 திரு. சிதம்பரப்பிள்ளை சிவானந்தம்
35) மு/362 திரு. கனகசபை தங்கராசா
36) மு/399 திரு. பொன்னையா கணபதிப்பிள்ளை
37) மு/408 திரு. அரியகுட்டி குமாரசாமி
38) மு/412 திரு. சரவணமுத்து வேலாயுதம்
39) மு/416 திரு. சதாசிவம் தங்கராசா
40) மு/419 திரு. வினாசித்தம்பி பரமலிங்கம்
41) மு/423 திருமதி. நகுலாம்பிகை தம்பு
42) மு/426 திரு. சூசைப்பிள்ளை மரியாம்பிள்ளை
43) மு/433 திரு. வேலுப்பிள்ளை குழந்தைவேலு
44) மு/444 திரு. சுவாம்பிள்ளைநீக்லஸ் பேர்ணாடியஸ்
45) மு/464 திரு. செல்லையா முருகுப்பிள்ளை
46) மு/468 திரு. அ. காசிப்பிள்ளை மகாலிங்கம்
47) மு/470 திரு. சின்னையா குமாரையா
48) மு/472 திரு. கணபதிப்பிள்ளை கதிர்காமு
49) மு/495 திரு. பொன்னையா நடராசபிள்ளை
50) மு/502 திரு. நாகநாதன் பாலசிங்கம்
51) மு/504 திரு. பொன்னம்பலம் தம்பையா
52) மு/528 திருமதி. கிரிஸ்ரீனம்மா யாக்கோப்பு
53) மு/539 திரு. சோமசுந்தரம் செல்லத்துரை
54) மு/543 திரு. ஆபிரகாம் சாமிநாதன்
55) மு/572 திரு. சின்னர் சிதம்பரப்பிள்ளை
56) மு/600 திரு. ஆறுமுகம் நாகமணி
57) மு/602 திரு. வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
58) மு/608 திரு. தேவசகாயம்பிள்ளை தொம்மையப்பு
59) மு/613 திரு. வைரவி மாணிக்கம்
60) மு/623 திரு. வயித்தி யாக்கோப்பு
61) மு/624 திரு. சின்னப்பு கந்தையா
62) மு/629 திரு. செபமாலை செபஸ்தி
63) மு/649 திரு. பேதுரு யோசேப்
64) மு/676 திரு. மாணிக்கம் நடராசா
65) மு/690 திரு. சின்னத்தம்பி முருகுப்பிள்ளை
66) மு/695 திரு. ஐயாக்குட்டி திருநாவுக்கரசு
67) மு/699 திரு. கண்பதிப்பிள்ளை சதாசிவம்
68) மு/726 திருமதி. செல்லம்மா செல்வரட்ணம்
69) மு/730 திருமதி. மனோன்மணி சிவக்கொழுந்து
70) மு/755 திரு. சின்னத்தம்பி பொன்னம்பலம்
71) மு/764 திரு. செல்லப்பா சின்னத்தம்பி
72) மு/772 திரு. சுவாம்பிள்ளை மரியாம்பிள்ளை
73) மு/775 திரு. செல்லையா சாமிநாதன்
74) மு/778 திரு. சுப்பிரமணியம் இராசையா
75) மு/784 திரு. ஆறுமுகம் வேலும்மயிலும்
76) மு/791 திருமதி. விசாலாட்சி ஆறுமுகம்
77) மு/849 திரு. சின்னத்தம்பி மகாதேவன்
78) மு/851 திரு. வேதாரணியம் சிதம்பரப்பிள்ளை
79) மு/863 திரு. வேலுப்பிள்ளை கார்த்திகேசு
80) மு/881 திரு. கந்தவனம் கனகையா
81) மு/883 திரு. சின்னையா சிதம்பரப்பிள்ளை
82) மு/899 திருமதி. சுபத்திரை கலியாணசுந்தரம்
83) மு/914 திரு. வல்லிபுரம் தர்மலிங்கம்
84) மு/939 திரு. முடியப்பு சின்னப்பு
85) மு/940 திரு. கந்தையா சிவகுரு
86) மு/944 திரு. பூதப்பிள்ளை தர்மலிங்கம்
87) மு/1004 திரு. தம்பையா பொன்னையா
88) மு/1005 திரு. தம்பாப்பிள்ளை செல்லையா
89) மு/1011திருமதி. முத்தம்மா இராசநாயகம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன விடிவெள்ளி அஸ்தமித்தது

இஸ்ரேல் ஆக்கிரமிப்பிலிருந்து தங்கள் தாயகத்தை மீட்க பலஸ்தீனர்கள் கடந்த 30ஆண்டுகளாக நடத்திவரும் விடுதலைப்போராட்டத்துக்கு தலைமையேற்று நடத்தி வந்தவர் யஸீர் அரபாத். தாய்நாடு பெறுவதில் முழுமையான வெற்றியை நெருங்கியதற்குக் காரணம் அவரின் நடவடிக்கைகள் தான்.

நாடற்ற அகதிகளாக அங்கும் இங்குமாக வாழ்ந்த 40 லட்சம் பலஸ்தீனர்களுக்குத் தாயகம் தந்த தலைவராக அவர் போற்றப்படுகிறார். கொரில்லாப் போர் வீரராக வாழ்க்கையைத் தொடங்கிய அரபாத் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவராக மாறி இன்று உலகின் சிறந்த ராஜதந்திரிகளுள் ஒருவராகப்போற்றப்படுகிறார்.

பலஸ்தீன விடுதலைப்போரின் வரலாறும் யஸீர் அரபாத்தின் வரலாறும் ஒன்றுதான்.

1929ஆகஸ்ட் 4ஆம் திகதி கெய்ரோவில் அவர் பிறந்தாலும் அவரது குடும்பத்தின் பூர்வீக இடம் ஜெருசலேம் தான்.

யஸீருக்கு நான்கு வயதான போது அவரது தாய் இறந்துவிட்டார். எனவே ஜெருசலேம் வந்து தமது மாமா ஆதரவில் வளர்ந்து வந்தார். உயர்கலவி பெற அவர் மீண்டும் 1937இல் கெய்ரோ சென்றார்.

பலஸ்தீனத்திலிருந்து பிரிட்டிஷார் வெளியேறியதைத் தொடர்ந்து அங்கு யூதர்களின் தாயகமான இஸ்ரேல் உருவானது. அங்கு வாழ்ந்து கொண்டிருந்த அரேபியர் நாடற்ற அகதிகளாகச் சிதறினர்.

எனினும் பெரும்பாலானோர் ஜோர்டான் ஆற்றுக்கு மேற்குப் பகுதியில் குடியேறினர். அப்பகுதியை ஜோர்டான் மன்னர் ஆக்கிரமித்துக்கொண்டார். எகிப்தில் புரட்சி ஏற்பட்டு மன்னர் பரூக் பதவியிலிருந்து அகற்றப்பட்டு தளபதி அப்துல் நஸாதின் ஆட்சியும் நிலைநாட்டப்பட்டது.

அப்போது, அரபாத் முஸ்லிம் சகோதரத்துவம் என்ற புரட்சி அமைப்பில் சேர்ந்து ஆயுதப் பயிற்சி பெற்றார். பின்னர் தம்மைப் போன்ற மாணவர்களுடன் இணைந்து பலஸ்தீனிய மாணவர் லீக் என்ற அமைப்பை நிறுவினார்.

1956இல் சுயஸ்கால்வாய் சிக்கலின் போது சிறிது காலம் எகிப்து படையில்சேர்ந்து பணிபுரிந்திருக்கிறார்.

அரபாத்தின் தந்தை காஸா பகுதியில் வாழ்ந்துகொண்டிருந்தார். அப்பகுதி பலஸ்தீனத்தின் ஒரு பகுதியாக இருந்தபோதிலும் 1948க்குப் பின் அது எகிப்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அரபாத்தின் சொந்த வீடு இன்னமும் காஸா பகுதியில் தான் உள்ளது.

பலஸ்தீனர்களின் பரிதாப நிலையை அரபு நாடுகள் உணர்ந்திருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. மாறாக தொல்லையாகத்தான் இருந்தார்கள்.

### பலஸ்தீன விடுதலை இயக்கம்

மேற்குக்கரைப்பகுதியில் ஆதிக்கம் செலுத்திய ஜோர்டான் அரசு அப்பகுதியை தனது நாட்டோடு இணைக்கும் பணியில் முனைந்திருந்தது. பலஸ்தீனம் என்ற சொல்லையே அவர்கள் தடை செய்தனர். இந்நிலையில் தான் 1964இல் பலஸ்தீன விடுதலை இயக்கம் (பி.எல்.ஓ) நிறுவப்பட்டது.

தொடக்க காலத்தில் அதன் தலைவராய் இருந்தவர் அகமது ஷுக்கெய். ஆனால் அவர் சிரியா மற்றும் எகிப்து தலைவர்களின் பகடைக்காயாக இருந்தார்.

1967இல் நடைபெற்ற ஆறுநாள போரில் பலஸ்தீனர்கள் வாழ்ந்த மேற்குக் கரைப்பகுதி, காஸா பகுதி ஆகியவற்றை இஸ்ரேல் ஆக்கிரமித்துக் கொண்டது. அதிலிருந்து இன்று வரை பலஸ்தீன மக்களுக்கு இஸ்ரேலின் ஆதிக்கம் தொடர்கிறது.

எகிப்து, சிரியா, ஜோர்டான் ஆகிய அரபு நாடுகள் ஆறுநாள் போரில் தோல்வியுற்றன. இதனையடுத்து 10 லட்சத்திற்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் மேற்கு கரைப்பகுதியிலிருந்து ஜோர்டானுக்கு சிதறிச் சென்றனர். அங்கு வாழ்ந்து கொண்டிருந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் இஸ்ரேல் ஆதிக்கத்தின் கீழ் அடிமை மக்களாய் வாழ்ந்தனர்.

இவ்வாறு பல்வேறு தொல்லைகளுக்குட்பட்ட பலஸ்தீனர்கள் தங்கள் விடுதலை இயக்கத்தை தீவிரப்படுத்த உறுதி எடுத்தனர்.

1969இல் அரபாத் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். யூதர்களும் அரேபியரும் இணைந்து வாழும் சமயச் சார்பற்ற பலஸ்தீனத்தை உருவாக்குவதே லட்சியம் என அறிவித்தார். சிரியா மற்றும் எகிபது போன்ற அரபு நாடுகளின் தலையீடு இல்லாமல் சுதந்திரமாக இயங்கத் திட்டமிட்டார். இதனால் ஆத்திரமடைநத ஜோர்டான் மன்னர் தமது நாட்டில் குடியேறிய பலஸ்தீனர்களைக் கடுமையாக நடத்தினார். 1971இல் நடைபெற்ற 'கறுப்பு செப்ரெம்பர் படுகொலை' பலஸ்தீனர்களை அங்கிருந்து வெளியேறி லெபனானில் தஞ்சம் புகுமாறு செய்தது.

தங்களது பரிதாப நிலையை உலகிற்குக் காட்ட பயங்கரவாதச்

# உலக தலைவர்கள் போற்றும் ஒப்பற்ற தலைவன் யஸீர் அரபாத்



செயல்களில் ஈடுபட்டது. இஸ்ரேல் நாட்டினுள் புகுந்து படுகொலை புரிந்தனர். ஒருசமயம் அவ்வாறு 40 பள்ளிச் சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். விமானங்களைக் கடத்தி பயங்கரவாதச் செயல்களை தீவிரப்படுத்தினர். எல்லாவற்றிற்கும் மேலாக 1972 ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்ட 12 இஸ்ரேல் வீரர்களைக் கடத்தி படுகொலை புரிந்தது.

இதன்மூலம் தாய் நாட்டை இழந்து நாடறற அகதிகளாகத் தவிக்கும் பலஸ்தீனர்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டுமென உலக நாடுகளுக்கு உணர்த்தினார்.

அதன் விளைவாக 1974இல் ஐ.நா.சபையில் பேசுவதற்கு அரபாத் அழைக்கப்பட்டார். அங்கு அவர் 'ஒலீவ் கிளையை கையிலேந்தி வந்திருக்கிறேன், மீண்டும் ஆயுதத்தை எடுக்க வைத்துவிடாதீர்கள்' என உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார்.

### கொலை முயற்சி

ஆனால் இஸ்ரேல் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் பலஸ்தீனர்கள் குடியிருந்த முகாம்கள் மீது குண்டுகள் வீசி தாக்கியது. அரபாத் தங்கியிருந்த வீடு கூட தாக்குதலுக்குள்ளானது. நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். கடைசியாக அவர்கள் அங்கிருந்து வெளியேறி துனிசியாவில் தஞ்சம் புக நேரிட்டது. இதுதவிர அரபாத்தை கொலைசெய்வதற்குப் பல முயற்சிகள் நடைபெற்றன. 2004இல் கூட அவரைக் கொல்வதற்கு முயற்சிகள் நடந்தன.

இஸ்ரேல் ஆக்கிரமித்த மேற்கு கரைப்பகுதியில் வாழ்ந்த பலஸ்தனர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 'இன்டிபெடா' எனப்பட்ட அக்கிளர்ச்சிகள் இஸ்ரேல் அரசுக்கு பெரும் தலைவலியை ஏற்படுத்தின. இந்நிலையில் 1988இல் பலஸ்தீனிய தேசிய கவுன்சில் அரபாத் தலைமையில் கூடி இஸ்ரேல் நாட்டின் சுதநதிர உரிமையை அங்கரித்ததோடு ஆயுத நடவடிக்கைகளைக் கைவிடுவதாகவும் அறிவித்தது.

அதன் பயனாக பலஸதீன விடுதலை இயக்கம் அமெரிக்காவுடன் நேரடி தொடர்புகொள்ள முடிந்தது. அதன் பின் அரபாத் சுதந்திர பலஸ்தீன அரசைப் பிரகடனம் செய்தார்.

1990இல் ஈராக், குவைத்தை ஆக்கிரமித்த போது அரபாத் அதனை ஆதரித்தார். இதன்மூலம் அவர் பிற அரபு நாடுகளின் ஆதரவை இழந்தார். எனினும் அப்போர் ஓர் உண்மையை உலக மக்களுக்கு எடுத்துரைத்தது என்றே சொல்லவேண்டும்.

பலஸ்தீனர்களுக்கு நியாயம் வழங்கப்பட்டால்தான் மததிய கிழக்கில் நிரந்தர அமைதி ஏற்படும் என்பதுதான் அந்த உண்மை. அதனையடுத்து அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும், ரஷ்ய அதிபர் கார்பசேவும், மேற்கு ஆசியச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வுகாண ஒரு மாநாடு கூட்டப்படும் என அறிவித்தார்கள்.

1991அக்டோபர் 30இல மாட்ரிடடில் மாநாடு கூடியது. முதன் முதலாக பலஸ்தீன அராபியரும் இஸ்ரேல் அரசும் நேருக்கு நேர் சந்தித்துப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. சிரியா, ஜோர்டான், லெபனான் ஆகிய நாடுகளும் பங்கு பெற்றன.

### 1993ஒப்பந்தம்

மாட்ரிட் மாநாட்டைத் தொடர்ந்து பி.எல்.ஓவும் இஸ்ரேலும் பல இடங்களிலும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தின. 1992 ஜூனில் இஸ்ரேலில் பழமைவாதக் கட்சியான லக்குட் தோல்வியுற்று தொழிற்கட்சி வெற்றி பெற்றது. இட்சாக் ராபன் பிரதமரானார். இறுதியாக 1993 செப்ரெம்பர் 13இல் வாஷிங்டனில் அமைதி ஒப்பந்தம கையெழுததானது. 45ஆண்டு கால பலஸ்தீன சச்சரவுகளுக்குத் தீர்வு கிடைத்தது. அதன்படி காஸா



பகுதியிலிருந்தும் மேற்குக் கரையிலுள்ள ஜெரிக்கோ நகரிலிருந்தும் 4 மாதங்களுக்குள் வெளியேற இஸ்ரேல இணங்கியது. மேற்கு கரைப் பகுதியிலிருந்து படிப்படியாக வெளியேறவும் சம்மதித்தது. 3ஆண்டுகளுக்குப் பின் அப்பகுதியின் இறுதி உரிமை குறித்து பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும எனவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அமைதி ஒப்பந்தம் அரபாத்தின் விவேகத்துடன் கூடிய பொறுமைக்குக் கிடைத்த வெற்றியென்றே கூறவேண்டும்.

இதைத் தொடர்ந்து 1995செப்ரெம்பர் 28இல் யஸீர் அரபாத்தும் இட்சாக் ராபனும் மற்றொரு அமைதி ஒப்பந்தத்தில கையெழுத்திட்டனர். அதன்படி மேற்கு கரையிலுள்ள மேலும் நகரங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேற இணங்கியது.

இந்த அமைதி ஒபபநதங்களுக்கு இரு தரப்பிலுமுள்ள தீவிரவாதிகள கடும் எதிர்ப்புத் தெரிவித்ததோடு வன்முறை நிகழ்ச்சிகள் மூலம் அமைதி ஏற்பாட்டிற்கு இடையூறு விளைவித்தனர்.

அதற்கேற்ப பல விபரீத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 1995நவம்பர் 5இல் இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபன் இஸ்ரேல் தீவிரவாதியால் சுட்டுக் கொல்லப்பட்டார். 1996மே 21இல் இஸ்ரேலில் நடைபெற்ற பொதுத தேர்தலில் பழமைவாதக் கடசியான லக்குட் வெற்றி பெற்றது. அக்கட்சியின் தலைவர் நெதன்யாகு பிரதமரானார். அமைதிக்காக எங்கள் பூமியை தானமளிக்க மாட்டோம என்ற கொள்கையைக் கொண்ட நெதன்யாகு சற்று இறுகலான போக்கைமேற்கொண்டார். எனினும் அரபாத் பேச்சுவார்த்தை மூலம் சிக்கலகளை விடுவிக்க முயன்றார். அதன பயனாக 1998 அக்டோபர் 23இல் மேற்குக் கரை ஆற்று ஒப்பந்தம் அப்போதைய அமெரிக்க அதிபர் கிளின்டன் முன்னிலையில் கையெழுத்தானது. எனினும் இது பிரச்சினைகளை எல்லாம் தீர்த்து வைத்ததாகக் கூறமுடியாது. அந்த ஒப்பந்தத்தை செயல்படுத்த நெதன்யாகு சில நிபந்தனைகள் விதித்தபோது மீண்டும் சிக்கல் தோன்றியது.

இதற்கிடையில் காஸா மற்றும் மேற்கு கரைப்பகுதியிலும் தேர்தல நடைபெற்றது. அதன்மூலம் 88பேர் கொண்ட சட்டசபை நிறுவப்பட்டது. இந்தத் தேர்தலை முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மிகார்டர் உட்பட 650 வெளிநாட்டு பார்வையாளர்கள் கண்காணித்தனர்.

1990இல் தனது 60வது வயதில தன்னைவிட 34 வயது குறைந்த சுகாவை அரபாத் மணம் முடித்தார். இவர்களுக்கு ஒரே மகள் பெயர் ஜாவா.

### முதல் அதிபர்

சுதந்திர பலஸ்தீனத்தின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை 1996 ஜனவரி 21இல் யஸர் அரபாததை முதல் அதிபராகத் தேர்வு செய்தது.

அமெரிக்காவில் ஜோர்ஷ் புஷ் பதவியேற்ற பின் 2002இல் பலஸ்தீன சீரமைப்பு என்ற பெயரில் நிர்வாகத்தில் சில மாற்றங்களைச் செய்ய மறைமுகமாக வலியுறுத்தினார். இஸ்ரேலுடன் பேச்சுவார்த்தைக்கும் தீவிரவாதிகளை ஒடுக்குவதிலும அரபாத் தனது கருத்துக்கு ஏற்ப செயல்படமாட்டார் என்று கருதிய அமெரிக்கா மத்தியஸதம செய்ய முன்வந்தது.

பலஸ்தீன தலைவர்களுள் ஒருவரான அபுமேசன் பலஸ்தீன பிரதமராக 2003மே 2இல் நியமிக்கப்பட்டார். பின்னர் பலஸ்தீன பார்லிமெண்டிலும் இதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. இதனால் அதிகாரம், யஸரிடம் இருந்து அவரது கைகளுக்கு மாறியது. முக்கிய விஷயங்களில் முடிவு எடுக்கும் அதிகாரம் அவரிடம் தான் இருந்தது.

*தொகுப்பு:* **பவன்**

### நோபல்பரிசு

'முகமது அப்துல் ரவோவ் அரபாத அல்குவத்வா அல்ஹுசைனி' என்பது தான் அவரது இயற்பெயர். அவர் கெய்ரோ கல்லூரியில் படிக்கும் போது சக மாணவர்கள் அவரை யஸீர் என அழைத்தனர். யஸீர் என்றால் 'கவலையில்லாதவன்' என்று பொருள்.

கவலையில்லாத கல்லூரி மாணவன் அரபாத் வாழ்க்கையில் எவ்வளவு பெரிய கவலைகள் சூழ்ந்தன. அவர் அணியும் வித்தியாசமான தலைப்பாகை கெபயா எனப்பட்டது. அதன் மேல்பகுதி பலஸ்தீன வரைபடம் போல் காணப்படுமாம்.

கொரில்லாப் போர் வீரனாக இருந்து சர்வதேச ராஜதந்திரியாக உயர்ந்த அரபாத்திற்கு பல சர்வதேச விருதுகளும் கிடைத்துள்ளன. 1994 அமைதிக்கான நோபல் பரிசை இஸ்ரேல் பிரதமர் இட்சாக் ராபனுடனும் வெளியுறவு அமைசசா ஷிமோன பெரசுடனும் பகிர்ந்துகொண்டார். 1990 இல் இந்தியாவிற்கு வருகை புரிந்த போது ஜவகர்லால் நேருவின் பன்னாட்டு நலலிணக்கததிற்கான விருதினை அன்றைய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி உட்பூசல்களையும் தாண்டி சேவை செய்வதே எமது நோக்கம்

## அமைச்சர் அனுரா

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும், ஸ்ரீலங்கா சுதந்



திரக்கட்சிக்கும் இடையே வேறுபாடுகள் இருப்பதன் காரணமாக பிரச்சினைகள் தோன்றுவது இயல்பே என கைத்தொழில் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு மருதானையில் நடைபெற்ற வைபவம ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத்தெரிவிக்கையில்,

கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது முன்வைக்கப்பட்ட தேர்தல் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இரு கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடனேயே ஏற்படுத்தப்பட்டன.

எவ்வாறெனினும், எமது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு எனப் பெயரிட்டு, தேர்தலில் போட்டியிட்டு ஆட்சியமைக்கப்பட்டது.

மககளால் வழங்கப்பட்ட ஆணையாகவே எம்க்குக் கிடைத்த வெற்றியை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம். இதன் பிரகாரம எமது கொள்கைகளின் காரணமாக இடம் பெறும் பிரச்சினைகளை விட்டுவிட்டு, மக்களுககு நன்மை செயவதே எமது பாரிய கடமையாகும் எனவும் குறிப்பிட்டார். (ந-121)

# மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் மீது பொலிஸார் தாக்குதல்

மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய மாணவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 23பேர் காயமடைந்துள்ளனர்.

ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய எஸ்.சுந்தரராஜன் ப்தவி உயர்வு பெற்று சென்றதையடுத்து பதில் அதிபராகக் கடமையாற்றிய ஜி.சபேசனை இடமாற்ற வேண்டாம் எனவும் அவரை நிரந்தர அதிபராக நியமிக்குமாறும் கோரி மாணவர்கள் மூன்றாவது நாளாக கடந்த புதன்கிழமை வகுப்புக்களைப் புறக்கணித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட சமயம் வாகனமொன்றில் வந்த பொலிஸார் வாகனத்தை நிறுத்திவிட்டு இறங்கி கண்மூடித்தனமாக மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக பாதிகக்கப்பட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது மாணவர் ஒருவா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைககப்பட்டார். இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

உடனடியாக அவ்விடம் வந்த பாராளுமன்ற உறுப்பினர் நிலைமைகளை அவதானித்ததுடன் பொலிஸார் மேற்கொண்ட அடாவடித்தனமான தாக்குதலையும் கண்டித்தார். அத்துடன் ஏறாவூர் பொலிஸ நிலையத்திற்கு சென்று மாணவரை விடுதலை செய்ததோடு ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு விடயத்தையும் கொண்டுவந்தார்.

இதேவேளை ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய அதிபரை இடமாற்றம் செய்வதற்கு மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை கைவிடுமாறு கோரி மாணவர்கள் கடந்த திங்கட்கிழமை முதல் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதிபரை உடனடியாக இடமாற்றம் செய்வதில்லையென மாவடட கல்வித் திணைக்கள அதிகாரிகள் வழங்கிய உறுதிமொழியினையடுத்து மாணவர்களது போராட்டம் இடை நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-121)

# போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது

## சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் கடைப்பிடிக்க ஜனாதிபதி எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்க விடயமென்று சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியேற்று 10வருடங்கள் பூர்த்தியடைந்ததையடுத்து பாராளுமன்றில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற பூஜைவழிபாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தமிழீழ விடுதலைப்புகளுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டார். இதனால் நாடு பிரியும் அபாயத்தை நீக்கினார்.

நாட்டிலிருந்த வீதித்தடைகள் காரணமாக ஜயசிறி மகாபோதி விகாரையைக்கூட வழிபட முடியாமலிருந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் வகையில் மக்கள் மத்தியில் ஒத்துழைப்பையும் நட்பையும் ஏற்படுத்தினார்.

தற்போது ஜனாதிபதியும் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனால் ஜனாதிபதி முன்னெடுத்துச்செல்லும் சமாதான நடவடிக்கைகள் யாவும் சாதகமாக அமையவேண்டுமென நாம் வேண்டுகின்றோம் என அவர் மேலும் கூறினார். (க-8)

# வரவு — செலவுத் திட்டத்தின் ஊடாக அரசு வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்

## பந்துல குணவர்த்தன கோரிக்கை

வரி மன்னிப்புச் சட்டமூலத்தை நீக்கியதன் மூலம் கிடைத்த நன்மைகளை, வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக மக்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

வரி மன்னிப்புச் சட்டமூலம் காரணமாக அரசாங்கத்துக்கு சுமார் 21ஆயிரம் கோடி ரூபா நிதிகிடைக்காமல் போனதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தலுக்கு முன்னர் அறிவித்திருந்தது.

இவ் 21ஆயிரம் கோடி ரூபா நிதி கிடைத்தால், அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு சமூர்த்திக் கொடுப்பனவு மற்றும் நிரந்தரத் தொழில்வாய்ப்பு ஆகியவற்றை வழங்கமுடியும்.

அத்துடன், 350 ரூபாய்க்கு விவசாயிகளுக்கு உரத்தை வழங்க முடியும். தேர்தலுக்கு முன்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்கம நிறைவேற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-121)

# மாவீரர்தின நிகழ்வுகளுக்கு இராணுவத்தினரும் பொலிஸாரும் இடையூறு விளைவிக்கமாட்டார்கள்!

## விடுதலைப்புலிகளிடம் இருதரப்பினரும் உறுதிமொழி

(வவுனியா)

மாவீரர் தின நிகழ்வுகளுக்கு இராணுவமோ அல்லது பொலிஸாரோ எந்தவிதமான இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடாது என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானவேல் கேட்டுக்கொண்டார்.

வவுனியா போர்நிறுத்தக்கண் காணிப்புக்குழுக் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற மாதாந்த சந்திப்பிலேயே இவ் வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானவேல், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலைதுணை அரசியல் துறைப்பொறுப்பாளர் தர்மேந்திரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவத்தின் தரப்பில் சிறிநாத் ராஜபக்ஸ தலைமையிலான இராணுவ உயர் அதிகாரிகளும் பொலிஸார் தரப்பிலும் நெருவில் குருகே தலைமையிலான அதிகாரிகளும், அரச தரப்பில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.ரகுநாதப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச் சத்திப்பில் முக்கியமாக மாவீரர் நாள் நிகழ்வுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

மாவீரர்தின நிழ்வுகளுக்கு எந்தவித இடையூறையும் ஏற்படுத்தாது. இராணுவத்தினரும் பொலிஸாரும் ஒத்துழைப்புத் தருவதாக இச்சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டதாக வவுனியா அரசியல் துறையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இராணுவததினர் கருத்துத் தெரிவிகலையில்,

இலங்கையின் சட்ட திட்டங்களுக்கும், நீதிக்கும் கட்டுபட்ட முறையில் நிகழ்வுகளை நடாத்துவதனால் எவ்விதமான பிரசசினைகளும் ஏற்படப்போவதில்லை எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, வவுனியாவில் அதிகளவான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் அதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுப்பது இல்லை எனவும் விடுதலைப்புலிகள் குற்றம்சுமத்தி வருவது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், இவ்வாறான குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த விடுதலைப்புலிகளை தம்முடன் இணைந்து செயற்படுமாறு கேட்டுக்கொண்டனர். (க-121)

# கிளைமோர் தாக்குதல்; சந்தேக நபர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலை களுவன்கேணியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஆச்சுனன் விஜயகுமார் (வயது -25) என்ற இளைஞனே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

இவ்வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்த களுவன்கேணி கிராமவாசிகள் இருவர் மீது இவர் மறைந்திருந்து குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட பின்னர், அவர்களுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பியோடினார்.

இது தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, ஏறாவூர் வீதித்தடையொன்றில் வைத்துப் பொலிஸார் இவரைக் கைதுசெய்தனர். (ந-121)

# வெளிநாட்டுக் கடிதங்கள் மோசடி: தபால் திணைக்களத்தின் ஊழியர்களுக்கும் தொடர்பு

(கொழும்பு)

வெளிநாட்டுக் கடிதங்கள் உடைக்கபபட்ட சம்பவங்களுடன் தபால்திணைக்கள ஊழியர்களும் தொடர்புபட்டிருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மத்திய பரிவர்த்தனை நிலையத்திலுள்ள வெளிநாட்டு தபால் பிரிவில் பணிபுரியும் சில அதிகாரிகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாகத தெரியவந்துள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்தார்.

இவர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. உடைக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டுக் கடிதங்கள் பல கடந்த 4ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்திற்கு அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-10)

## வலயமட்ட சம்பியன்கள்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளிற்கிடையே நடைபெற்ற தாசசிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாசாலையும், பெண்கள் பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலையும் வலய மட்ட சம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இப் போட்டிகள் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாசாலை மைதானத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (ப-47)

# மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்படவுள்ளனர்

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். மாவீரர் தினத்தையொட்டி இம்மாவீரர்களின் பெற்றோர்கள் ஊரக, வலய, கோட்ட மட்டங்களில் பல்வேறு அமைப்புக்கள் மூலம் கௌரவிப்பதற்கான முனனேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

வலி.மேற்கு பிரசேதத்திலுள்ள 25 கிராம சேவகர் பிரிவுகளையும் நான்கு வலயங்களாக பிரித்து வலய மட்டக் கௌரவிப்பும் இடம் பெறவுள்ளது. அந்தவகையில், சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி என நான்கு வலயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதேவேளை. வலி.மேற்கு கோட்டம் என்ற ரீதியில் பொதுக் கௌரவிப்பு நிகழ்வு சங்கானையிலும்; கிராமசேவையாளர் பிரிவு தோறும் ஊரக கௌரவிப்பு நிழ்வுகளை சனசமூக நிலைய மட்டங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ச-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை -2004

ஆக்கம்: செ.அன்ரன் (அதிபர்)
மையிலிட்டி றோ.க.வித்தியாலயம்.

## விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் பகுதி I

நேரம்: 1மணி

பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01.Kwh பின்வருவனவற்றில் எதன் அலகு?
i)சக்தி ii)வலு iii)விசை iv)மின்னோட்டம்

02.பின்வருபவர்களில் இரசாயனவியல் தொடர்பான விஞ்ஞானி யார்?
i)மெண்டல் ii)மெண்டலீவ் iii)டார்வின் iv)ஆக்கிமிடிஸ்

03.பொலி வைனைல் குளோரைட்டைப் பயன்படுத்தி அதிக அளவில் ஆக்கப்படும் பொருள் எது?
i)உரப்பை ii)நீர்க்குழாய் iii)மீன்பிடிவலை iv)மூக்குக்கண்ணாடி

04.உடலினுள் புதிதாகப் பொருட்கள் தொகுக்கப்படும் செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
i)கழிவகற்றல் ii)சுவாசம் iii)உட்சேபம் iv)அனுசேபம்

05.பின்வருவனவற்றில் எக்கூற்று ஆவியுயிர்ப்பு எனும் தொழிற்பாட்டை நன்றாக விளக்கும்
i)தாவரப் பகுதிகளில் இருந்து நீர்த்துளியாக வெளியேறல்
ii)தாவரப் பகுதிகளிலிருந்து நீர்த்துளிகளும் உப்புகளும் வெளியேறல்
iii)நிலத்திற்கு மேலுள்ள தாவரப் பகுதிகளினூடாக நீர் ஆவியாக வெளியேறல்
iv)நிலத்திற்கு மேலுள்ள தாவரப் பகுதிகளினூடாக நீரும் கனியுப்புக்களும் ஆவியாக வெளியேறல்

06.பின்வரும் எக்காரணி அதிகரிக்கும்போது ஒளித்தொகுப்பு வீதம் முதலில் அதிகரித்து பின்னர் குறைவுறும்
i)காபனீரொட்சைட்டு ii)ஒளி iii)பச்சையம் iv)வெப்பநிலை

07.தன் மகரந்தச் சேர்க்கை என்பது தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது
i)ஒரு பூவின் மகரந்தமணி அதே பூவின் குறியை அடைதல்
ii)ஒரு பூவின் முதிர்ந்த மகரநதமணி அதே பூவின் குறியை அடைதல்
iii)ஒரு பூவின் முதிர்ந்த மகரந்தமணி அதே பூவின் வாங்கும் தன்மையுள்ள குறியை அடைதல்
iv)ஒரு பூவின் மகரந்தமணி அதே பூவின் அல்லது அதே தாவரத்தின் வேறொரு பூவின் குறியை அடைதல்

08.பனங்கிழங்கானது பனைத் தாவரவித்தின்
i)வித்தகவிழையம் ii)உணவு சேமிக்கும் வேர்
iii)முளைவேர் iv)வித்திலை

09.ஆவியுயிர்ப்பு உறிஞ்சன்மானியின் பயன்பாடு பின்வருவனவற்றில் எது?
i)ஆவியுயிர்ப்பை அளத்தல்
ii)ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிடல்
iii)ஆவியுயிர்ப்பைக் கணித்தல்
iv)ஒளித்தொகுப்பு வீதத்தை அளவிடல்

10.மரவள்ளிக்கிழங்கு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
i)அது உணவு சேமிக்கப்பட்ட வேர்
ii)அது உணவு சேமிக்கப்பட்ட இடமாறிப் பிறந்த வேர்
iii)அது உணவு சேமித்த நிலக்கீழ்த் தண்டாகும்
iv)அது உணவு சேமித்த வேர்த்தண்டாகும்.

11.இலங்கை அரசினால் சமுத்திரப் புகலரணாகப் பிரகடனம் செய்யப்பட்ட முருகைக்கற்பாறைப் பிரதேசம் பின்வருவனவற்றில் எது?
i)பருத்தித்துறை ii)பாசிக்குடா iii)குச்சவெளி iv)ஹிக்கடுவை

12.மோட்டார் வாகனத்தின் கதி மானியில் கதி காட்டப்படும் அலகு
i)$ms^{-1}$ ii)$Kms^{-1}$ iii)$Kmh^{-1}$ iv)$mh^{-1}$

13.தென்னை மரத்திலிருந்து விழும் தேங்காயின் இயக்கம்
i)ஆர்முடுகல் ii)அமர்முடுகல் iii)மாறா வேகம் iv)சீரான ஆர்முடுகல்

14.0.8Nவிசை 2Kg திணிவு மீது தாக்கும் போது உண்டாகும் ஆர்முடுகல் யாது?
i) $0.16ms^{-2}$ ii) $0.04ms^{-2}$ iii) $0.4ms^{-2}$ iv) $1.6ms^{-2}$

15.அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றில் 1000W எனக் குறிக்கப்பட்டிருந்தது. அதன் விளக்கம் யாது?
i)ஒரு நிமிடத்தில் 100வாற்று மின் பிறப்பிக்கப்படும்
ii)ஒரு செக்கனில் 1000Ks மின்சக்தி பிறப்பிக்கப்படும்
iii)ஒரு செக்கனில் 1000J மின்சக்தி பிறப்பிக்கப்படும்
iv)ஒரு நிமிடத்தில் 1000 யூல் மின்சக்தி பிறப்பிக்கப்படும்

16.5000g நீரின் வெப்பநிலையை $30^0C$ இலிருந்து $80^0C$இற்கு உயர்த்துவதற்குத் தேவையான வெப்பக் கணியம் யாது? (நீரின் தன் வெப்பக் கொள்ளளவு $4200J/Kg^0C$)
i) 1050J ii) 1050 000J iii)2500 000J iv)1050 000 000 J


17.பின்வரும் திரவங்களில் தன்வெப்பக் கொள்ளளவு கூடிய திரவம் எது?
i)நீர் ii)கடல்நீர் iii)மண்ணெண்ணெய் iv)தேங்காயெண்ணெய்

18.குறைந்தளவு மின்சக்திப் பயன்பாடு, சக்தி விரயம் குறைவு, இணைத்தல் இலகு ஆகிய நன்மைகளைக் கொண்ட மின்குமிழ் பின்வருவனவற்றில் எது?
i)இழை மின்குமிழ் ii)தொகையிடு மின்குமிழ்
iii)புளோரொளிர்பு மின்குமிழ் iv)நியோன் மின்குமிழ்


19.ஆவியுயிர்ப்பைக் குறைப்பதற்காக இலைகள் செதில்களாகத் திரிபடைந்த தாவரம்
i)சதுரக்கள்ளி ii)அலரி iii)பூசணி iv)சவுக்கு

20. 
படத்தில் காட்டப்பட்டுள்ள மாதிரியுரு
i)ஒட்சிசன் அணு
ii)ஒட்சிசன் வாயு
iii)ஒட்சிசன் அயன்
iv)ஐதரசன் அணு

21.இழை மின்குமிழ்களினுள் ஆகன்வாயு இட்டு நிரப்பப்படுவதன் காரணம்
i)ஆகன்வாயு அடர்த்தி கூடியதாகையால்
ii)அது ஒரு விழுமிய வாயு, அது வெப்பமடைந்த இழையுடன் தாக்கமடையாதாகையால்
iii)அது சடத்துவ வாயு என்பதால்
iv)அது இழையை எரியச் செய்யாதாகையால்

22.படத்திலுள்ள அமைப்பை அமைத்து சிறிது நேரத்தின் பின் உமது அவதானம்


i)நாகக் கோலைச் சூழ வாயுக்குமிழ்கள் தோன்றும்
ii)செப்புக்கோல் கரையும்
iii)ஐ $H_2SO_4$ செந்நிறமாகும்
iv)கல்வனோமானி சிறிய மின்னோட்ட வாசிப்பைக் காட்டும்

23.படத்திலுள்ள அமைப்பு

i)இருவித்திலைத் தாவர இலையின் வெட்டுமுகம்
ii)இருவித்திலைத் தாவர இலையின் மேற்றோல் உரிப்பு
iii)ஒருவித்திலைத் தாவர தண்டின் குறுக்குவெட்டு
iv)இலையின் மேற்றோல் உரிப்பின் நுணுக்குக் காட்டித் தோற்றம்

24.  அருகிலுள்ள நியமக் குறியீடு குறிப்பது
i)தொடக்கிய ஆளி ii)திரான்சிஸ்ரர்
iii)தொடர்பறுத்த ஆளி iv)தொடுக்கும் கம்பி

25.பின்வருவனவற்றில் பிரிகையடைந்து அழியக்கூடியது
i)பவிக்கம்பியின் காப்புறை ii)P.V.C நீர்க்குழாய்
iii)இறப்பர் செருப்பு iv)பிளாத்திக்கு வாளி

26.பின்வருவனவற்றில் மின்னைக் கடத்தும் கரைசல்
i)சீனிக்கரைசல் ii)செப்புசல்பேற்றுக் கரைசல்
iii)குளுக்கோசுக் கரைசல் iv)சோடியச் கரைசல்

27.தூண்டிலினால் மீன்பிடித்தல் எத்தனையாம் வகை நெம்புகோலிற்கு உதாரணமாகும்?
i)1ம் வகை நெம்புகோலுக்கு ii)2ம் வகை நெம்புகோலுக்கு
iii)3ம் வகை நெம்புகோலுக்கு iv)4ம் வகை நெம்புகோலுக்கு





28.500N நிறையுடைய கற்பாறையைப் புரட்ட 1m நீளகோல் பயன்படுத்தப்பட்டது. விசைப் புயத்தின் நீளம் 3/4m எனின் பிரயோகித்த விசை யாது?
i) 3N ii) 500N iii) $\frac{500}{3}$N iv) 250N

29.மேலேயுள்ள வினா 28இன் பொறிமுறைநயம் யாது?
i) 3 ii) 4 iii) 2 iv) 1

30.திரவ அமுக்கம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது/ சரியானவை
a)திரவத்தின் ஆழம் கூட அமுக்கம் குறையும்
b)திரவ அமுக்கம் பாத்திரத்தின் எல்லாப் புள்ளிகளிலும் சமமானது
c)திரவ அடர்த்தி அதிகரித்தால் அமுக்கம் அதிகரிக்கும்
i) a,b ii) b iii) c iv)b,c


31.குளுக்கோசின் ஒரு சீர்தநிலையைப் பேணுவதில் பங்கெடுக்கும் ஓமோன்
i) ADH ii)ACTH iii)இன்சுலின் iv)தைரொட்சின்

32.மூடிய சுற்றோட்டத்தொகுதியில் பதார்த்தப் பரிமாற்றலை நிகழ்த்தும் ஊடகம் எது?
i)நிணநீர் ii)இழையப்பாய்மம் iii)கலச்சாறு iv)குருதி

33.பின்வரும் படங்களில் நீள்பார்வைக் குறைபாட்டைக் குறிப்பது
i)  ii)  iii)  iv) 

34.கன்னிக் கனியமாதல் என்பது
i)மகரந்தச் சேர்க்கை நடைபெறாது கனி உருவாகுதல்
ii)கருக்கட்டல் நடைபெற்றுக் கனியுருவாகுதல்
iii)மகரந்தச் சேர்க்கை நடைபெற்றுக் கனியுருவாகுதல்
iv)மகரந்தச் சேர்க்கை நடைபெறும் கருக்கட்டல் நடைபெறாது கனியுருவாகுதல்

35.தொலைக்காட்டியில் தோன்றும் விம்பத்திற்கும் அரிய இருவிழியினில் தோன்றும் விம்பத்திற்கும் இடையிலுள்ள ஒற்றுமை
i)இரண்டும் தலைகீழானவை
ii)இரண்டும் தொலைவிலுள்ள பொருட்களின் விம்பங்கள்
iii)இரண்டிலும் விம்பத்தின் முப்பரிமாணத் தோற்றம் தென்படும்
iv)இரண்டினூடாகவும் பெரிய பரப்பைப் பார்க்கலாம்

36.  படத்திலுள்ள நுட்பம் பயன்படும் சந்தர்ப்பம்
i)சக்தி பிறப்பிக்க ii)சக்தி ஊடுகடத்த
iii)சக்திவடிவத்தை மாற்ற iv)வேலையை இலகுவாக்க

37.மலேரியாவினால் பாதிக்கப்படும் குருதியின் கூறு
i)செங்கலம் ii)வெண்குருதிக்கலம் iii)குருதிச்சிறுதட்டு iv)திரவவிழையம்

38.மனித உணவுச் சமிபாட்டின் நோக்கம்
i)கழிவு அகற்றல் ii)வளர்ச்சி iii)உணவு உறிஞ்சப்படல் iv)சக்தி உற்பத்தி

39.ஊசியில் நூல் கோர்த்தலைச் சிறப்பாகச் செய்து முடிக்கப் பொறுப்பான மூளையின் பகுதி
i)மூளையம் ii)மூளி iii)நீள்வளையமையவிழையம் iv)முண்ணாண்

40.சூழலுக்கு நேசமான மனப்பாங்குடைய செயன்முறை
i)பிளாத்திக்குப் பொருட் பாவனை மறுதலிப்பு
ii)பிளாத்திக்குப் பொருட் பாவனைத் தடை
iii)பிரிந்தழியும் பிளாத்திக்கு கண்டுபிடிப்பு
iv)பிளாத்திக்குப் பொருட் பாவனை இயன்றவரை குறைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்லும் வைத்தியர்களுக்கான பிணைத்தொகை அதிகரிப்பு நியாயமற்றது

## அரச மருத்துவ உத்தியோகஸ்தர் சங்கம் ஆட்சேபம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பட்டப் பின்படிப்பை மேற்கொள்ளச் செல்லும் வைத்தியர்கள் செலுத்த வேண்டிய பிணைத்தொகை 50 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளமை நியாயமற்றது என அரசாங்க மருத்துவ உத்தி யோகஸ்தர் சங்கம் தெரிவித்துள் ளது.

இதனால் வெளிநாடுகளில் கல்வி கற்கச் செல்லும் வைத்தியர்களின் எண்ணிக்கை குறையும் சாத்தியம் உள்ளதனால் சுகாதார சேவையின் தராதரம் பாதிக்கப்படும்.

எனவே, அரசதுறை ஊழியர்களின் சம்பளம் மீது விதிக்கப் படும் எந்தவொரு வரியையும் மருத்துவர்கள் செலுத்துவதில்லை என்று சங்கத்தின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

அத்துடன் வரி செலுத்தாத மருத்துவ உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் பட்சத்தில் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)


Jaffna College Institute of Technology
Vaddukoddai.

The Following course will commence from 15th November 2004.

1.DIPLOMA COURSE

Computer Programming & Data processing
Duration:-1 Year (full time)
(includes Application Packages, C, Java & Oracle)

Facilities
- Library
- Hostel
- Sports

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-
Director
Jaffna college Institute of Technology, vaddukoddai.
T.Phone:- 060-2213139 E-mail:-jcit@sltnet.lk
(C/693)


# அரசியல்வாதிகள் சிலரின் அழுத்தம் காரணமாகவே நீதித்துறை மாசுபடுகிறது

## பல்கலை விரிவுரையாளர் றோகான் எதிரிசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நீதித்துறையானது அரசியல்வாதிகள் சிலரின் அழுத்தங்களின் காரணமாகவே மாசுபடுவதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷட விரிவுரையாளர் றோகான் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில, நீதித்துறை மாசுபடுவதாக ஜனாதிபதி நேர்மையாகவும் திறந்த மனப்பான்மையுடனும் பேசியமை பாராட்டத்தக்கதாகும்.ஜனாதிபதி போன்ற நேர்மைத்தன்மை மிக்கவர்கள் நீதித்துறையிலும் உள்ளார்கள் என நான் கருதுகின்றேன்.

நாட்டின் நதிக்கட்டமைப்பு ஊழல் மிக்கதாக இருக்குமென்றால் யார் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

1970 ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைமைத்துவமானது நீதித்துறையின் சுயாதீன தன்மைக்கும் தடைகளை ஏற்படுத்தி வந்துள்ளது.

இதனால் நீதித்துறைக்கு அரசியல் அழுத்தங்களை ஏற்படுத்தி மாசுறுவதற்கு உரமூட்டிய எமது நாட்டின் அனைத்து அரசியல் தலைவர்களும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமென அவர் மேலும் கூறினார். (க-8)

# பிரி.இராணுவ அதிகாரிகள் மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

பிரித்தானிய இராணுவ உயர் அதிகாரிகள் இருவர் கடந்த புதன்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

இலங்கைக்கான பிரித்தானிய தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்ரினன் கேணல் கொலின்மாட்டின் பாதுகாப்புத் திட்ட அதிகாரி லெப்ரினன் கேணல் நெக்சிலிங்கிரா ஆகியோரே மட்டக்களப்புக்கு விஜயம் செய்தவர்களாவர்.

மட்டக்களப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மாவட்ட பிரதி அதிகாரி றோர்கோலின் தலைமையில் இடம்பெற்ற கூட்டதிலும் இவர்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தில் பாதுகாப்பு விடயங்கள் உட்பட பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. (இ-8)

# சிஹல உறுமய பிரதிநிதிகளின் அதிகாரங்களை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் வழிநடத்தல் அதிகாரம் என்பவற்றுடன் தொடர்புடைய சிஹல உறுமய பிரதிநிதிகளிடம் இருந்து அவறறை நீக்க வேண்டுமென கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான உடுவே தம்மாலோகதேரர் வலியுறுத்தியுள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தை உயர்பீடத்தின் அதிகாரதத்துக்குள் கொண்டுவர ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைவரான எல்லாவல மேதானந்த தேரருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே உடுவே தம்மாலோக தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கட்சி ஆரம்பிக்கப்பட்டது முதல் நாம் இந்த நிலைப்பாட்டையே கொண்டிருந்தோம். தேர்தல் நடந்து முடிந்த பின்னர் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் தலைமைத்துவம் சிஹல உறுமய கட்சிக்குள சென்றுள்ளது.இவரது அபிலாசைகளை நிறைவு செய்யும பொருட்டு இந்தத் தலைமைத்துவம் இயங்கிவருகிறது என அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

## நூல்வெளியீடு

பொலிகையூர் சு.க. சிந்துதாசனின் "ஓரிடம்" எனும் கவிதைத் தொகுதி வெளியீடு கடந்த 7 ஆம் திகதி நடைபெற்றுள்ளது.

இதில் வரவேற்புரையை த.அஜந்தகுமாரும் அறிமுகவுரையை இ.இராஜேஸ் கண்ணனும் வெளியீட்டுரையை எம்.ஐ.ஏ. ஜபாரும் ஆய்வுரைகளை எஸ். குணேஸ்வரன், ச.இராகவன் ஆகியோரும் நன்றியுரையினை பொன். சுகந்தனும் நிகழ்த்தினர். (ப-108)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள்
மிகை நாடி மிக்க கொளல் - குறள்

வலம்புரி

# சுதந்திர உணர்வை உரமாக்கிய யசீர் அரபாத்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத்தின் மறைவு சுதந்திரத்திற்காகப் போரா டும் மக்களுக்குப் பேரிழப்பாகும்.

அடிமைப்பட்டு வாழ்வதைவிட போராடிச் சாவதே மேல் என்ற தத்துவத்தைத் தாரகை மந்திரமாகக் கொண்டு போராடியவர் யசீர் அரபாத்.

இஸ்ரேலின் அடக்குமுறைக்கும், அராஜகத்திற்கும் எதிராகப் போராடிய ஓர் மாமனிதனை இந்த உலகம் இழந்துவிட்டது. எனினும் அவரின் போராட்டம் உலக வரலாற்றில் ஓர் முக்கியமான பதிவாகிவிட்டது. பாலஸ்தீன மக்களின் உரிமைக்காகப் போராடிய அரபாத் தனது வாழ்வையே மக்களுக்காக அர்ப்பணித்தவர். அவரின் போராட்டத்தை உலக நாடுகள் அங்கீகரித்தன.

இவ்விதம் அரபாத்தின் போராட்டத்தை உலக நாடுகள் அங்கீகரித்ததன் ஊடாக இஸ்ரேலின் கொடூரம் அம்பலமாக்கப்பட்டது.

பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக, சுதந்திரத்திற்காக இஸ்ரேலுடன் மட்டும் அரபாத் போராடவில்லை, மாறாக இஸ்ரேலின் அடிவருடிகளுடனும், இஸ்ரேலுக்கு ஆலோசனை வழங்கும் வல்லரசுகளுடனும் அவர் போராடவேண்டியிருந்தது. எத்தனையோ தடவைகள் அரபாத்தை கொலை செய்யும் நோக்குடன் தாக்குதல் நடாத்தப்பட்டபோதிலும், அவரின் ஆன்மா பலமும் பாலஸ்தீன மக்களின் விசுவாசமான பிரார்த்தனைகளும் அவரைக் காப்பாற்றியது.

பாலஸ்தீன மக்களின் உரிமைக்காகப் போராடிய அரபாத் மீது அநாகரிகமான முறையில் தாக்குதல் நடத்திய இஸ்ரேல், அரபாத் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் உயிருக்காகப் போராடியவேளையில் அவர் இறந்துவிட்டதாக ஊடகங்கள் மூலம் செய்தி வெளியிட்டிருந்தது.

ஒரு போராட்ட வீரன் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் இருக்கும் வேளையில் - பாலஸ்தீன மக்கள் தங்களின் மீட்பருக்காக பிரார்த்தித்துக்கொண்டிருக்கையில் அவர் இறந்துவிட்டதாக செய்தி வெளியிடும் இஸ்ரேல், பாலஸ்தீன மக்களை எப்பாடுபடுத்தியிருக்கும் என்பதை புரிந்துகொள்வதற்கு இது போதுமானதாகும்.

எனினும் பாலஸ்தீன மக்களுக்காகப் போராடிய யசீர் அரபாத்தின் போராட்டம் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதாயினும், அவரின் விடயத்தில் உலக வல்லரசுகள், ஆதிக்கப் பலம்மிக்க நாடுகள் அரபாத்தை ஏமாற்றிவிட்டன என்றே கூறவேண்டும்.

வருடக் கணக்கில் போராட்டம் நடத்தியவேளையிலும் பாலஸ்தீனத்திற்கு ஓர் பூர்ணமான - நிறைவான சுதந்திரம் கிடைக்காமை அரபாத்தை வெகுவாகப் பாதித்திருந்தது.

இதற்குக் காரணம் உலக நாடுகளின் நடிப்பை அரபாத் நம்பியதே ஆகும். பாலஸ்தீன மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவேண்டும் எனக் கூறிய அமெரிக்கா போன்ற நாடுகள் ஏக காலத்தில் இஸ்ரேலுடனும் நல்லுறவைக் கொண்டிருந்தன. இஸ்ரேலின் மிருகத்தனத்தை கண்டிக்கவோ அன்றி எச்சரிக்கவோ அமெரிக்கா ஒருபோதும் முற்படவில்லை.

அரபாத்தின் தோளில் கைபோட்ட அதே அமெரிக்கா இஸ்ரேலின் காதுகளில் 'அரபாத்தைக் கொல்' என்று உச்சாடனம்செய்தது. இவ்வாறு வல்லரசுகள் மறைமுகமாக அரபாத்தின் உணர்ச்சி பூர்வமான போராட்டத்தை நசுக்க முற்பட்டது. இன்று அந்த மாமனிதர் மறைந்துவிட்டார்.

அவரை ஏமாற்றிய தலைவர்கள் இன்று அஞ்சலி செலுத்தும் விதம் உலக அரசியலில் உச்சமான நடிப்பு எனலாம். எதுவாயினும் அரபாத் என்ற சுதந்திர விரும்பி பாலஸ்தீனத்தில் விதைத்த சுதந்திர வேட்கையை யாராலுமே அழிக்க முடியாது. இதுவே உறுதி.

# ரம்ழான் முடிந்ததும் ஜனாதிபதிக்கு எதிராக வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை ஒடுக்குவதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு சதி நடவடிக்கையும் வெற்றியளிக்கமாட்டாதென ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

நேற்றிமுன்தினம் இரவு கல்முனை சாகிரா கல்லூரியில் நடைபெற்ற நோன்பு இப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் கூறியுள்ளார. சாவதேச சமூகம் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச வேண்டுமென எதிர்பாாக்கின்றது. ஆனால் ஜனாதிபதியோ ஏதோ ஒரு வழியில் விடுதலைப்புலிகளை ஒடுக்க வேண்டுமென கனவு காண்கின்றார். இது சாத்தியப்படாது. பதவிக்கு வரும் எந்த அரசு மீதும் முஸ்லிம்களுககு நம்பிக்கையில்லை. இது கடந்த கால அனுபவம். இதன் காரணமாகவே சமாதானப் பேச்சுவார்த்தையில் தனித் தரப்பை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.



தற்போதைய அரசாங்கம் முஸ்லிம் சமூகத்திற்கு சொல்லொணாத துயரங்களை ஏற்படுத்த முற்படுகின்றது. எனினும்இதனை முறியடிப்பதற்கு நாம் திடசங்கற்பம் பூண்டுளளோம். புனித ரம்ழான முடிந்தவுடன் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிககும் எதிரான முஸ் லிமகளின் வெகுஜனப் போராட்டம முன்னெடுக கபபடும எனறும ரவூப்ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

# தமக்கென அரசியல் சாசனத்தை உருவாக்க தமிழர்களுக்கு சகல உரிமைகளும் உண்டு

## மாவை சேனாதிராஜா தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழ் மக்கள் தங்களுக்கான அரசியல் சாச னத்தை உருவாக்கிகொள்ள அனைத்து உரிமையும் உண்டு என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தமிழீழ சட்டக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் பங்கேற்றுப் பேசிய மாவை சேனாதிராசா இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் எப்போது அமைதி உடன்பாடு ஏற் பட்டதோ அப்போதே இலங்கைத் தீவுக்குள் இரண்டு தேசங்கள் உள்ளன எனபது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என்று கூறினார்.

இலங்கையின் நீதித்துறை மீதான தமிழர்களின் நம்பிக்கையின்மைதான் தமிழர்களை ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளியது என்பதை வரலாற்று நிகழ்வுகளோடு மாவை சேனாதிராசா சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கையின் நீதித்துறை மற்றும் காவல்துறை ஆகியவைதான் இலங்கையில் மிகவும் ஊழல் நிறைந்த துறைகள் என்று ஜனாதிபதி சந்திரிகாவே கூறியுள்ளாக வெளியான செய்திகளையும் மாவை சேனாதிரா குறிப்பிட்டுக் கூறினார்.

(க-121)

# மருத்துவ முறைகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஆய்வு செய்ய உலக மாநாடு

## நவம்பர் 27 இல் கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

மாற்று மருத்துவ அமைப்பான மெடிசினா ஒல்ரநேற்றிவா என்னும் அமைப்பின் 42வது உலக மாநாடு நவம்பர் 27முதல டிசம்பர் 5 வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

பிறேசில், மெக்சிக்கோ, அமெரிக்கா, சுவீடன், தென்னாபிரிக்கா, செக்குடியரசு, பரகுவே;சீனா, தாய்வான் உட்பட 142 நாடுகள இதில் பங்குபற்றவுள்ளன.

மனித குலத்தின் நல்வாழ்வுக்கான அனைத்து மருத்துவ முறைகளையும் ஒருங்கிணைத்து ஆய்வு செய்வதே இம் மாநாட்டின் நோக்கமாகும்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் 27ஆம திகதி சபாநாயக்கர் ஜெ.எம். லொக்குபண்டார தலைமையில் இம்மாநாடு ஆரம்பித்து வைக்கப்படும்.

இது தொடர்பான மருத்துவக்கிளினிக்கொன்று டிசம்பர் 5ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

படையினர், புலிகள் தரப்பினரும் வைபவத்திற்கு அழைக்கப்படுவர். வாணவேடிக்கைகளும் இடம்பெறும்.

இது தொடர்பாக திறந்த பல்கலைக கழகத்தில் ஒருங்கிணைக கப்பட்ட மருத்துவ வளாகம் ஒன்று ஜனவரி 15ஆம் திகதி திறந்து வைக்கப்படும். மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களும் வழங் கப்படும்.மாநாட்டு நிகழ்வுகளுக்கு அன்ரன் ஜெயவர தலைமை தாங்குவார். மேற்படி நாடுகளின் தூதுக்குழுக்கள் பல யாழ. போதனா வைத்தியசாலைக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

இவர்கள் 154 ஆண்டுகள் பழமைவாய்ந்த மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக்கும் விஜயம் செயவர்.

அத்துடன் வடக்கின் மருத்துவமுறைகளை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தக்கூடிய மருத்துவக்கல்லூரி ஒன்றை உருவாக்குவது பற்றிய ஆரம்ப நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர். இது ஒரு வரலாற்று முன் நடவடிக்கையாகும் என ஏற்பாட்டாளர்கள தெரிவித்தனா. (த)

# தமிழ் மாணவர்களின் கல்வியை அரசு திட்டமிட்டு புறக்கணிக்கிறது

(கொழும்பு)

காலம் காலமாக தமிழ் மாணவர்களின் கல்வி அரசாங்கத்தினால் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என மன்னாா மாவட்ட கல்விக்கழகப்பொறுப்பாளர் ஒளிவளவன் தெரிவித்துள்ளார்.

மன்னார்- மடு கல்வி வலயத்தின் கல்விநிலை தொடர்பாக கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத்தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் மடு கல்வி வலயத்தில் படையினர் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பெரும்பாலான பாடசாலைகளில் பௌதீகவளங்கள் அழிக்கப்பட்டன.

தற்போது அங்கு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில், இக்கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகள் இயங்க ஆரம்பித்துள்ளன. இந்நிலையில், கணிசமான அளவு வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்களின் நிதியுதவியுடன் பௌதீக வளங்கள் பாடசாலைகளுக்குக் கிடைக்கப்பெற்றாலும் இங்கு நிலவும் ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்ப அரசாங்கம் இது வரை நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை.

அரசாங்கம் திட்டமிட்டே இப்புறக்கணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. மடு கல்வி வலயத்தில் இரண்டு ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே உள்ளனர் என்றார். (ற-121)

# பிரதி அமைச்சர் பதவியிலிருந்து மேர்வின் சில்வா இராஜினாமா!

(கொழும்பு)

தொழிலுறவுகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பான பிரதியமைச்சர் மேர்வின்சில்வா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார். ஜனாதிபதியும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கறுவாத்தோட்டை இரவு விடுதி ஒன்றில் தனது மகன் மூலம் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றிய விசாரணைகள் பூர்த்தியாகும் வரை பதவியிலிருந்து விலகியிருப்பதாக மேர்வின்சில்வா தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தைப் பயன்படுத்தி ஒரு சிலர் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முனைகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.தான் பிரதியமைச்சராகக் கடமையாற்றிய காலத்தில் பதவிக்குரிய எதுவித கொடுப்பனவையும் பெறவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ற-121)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

இறைவன் தன் திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். அவர் கூடத் தவறுகள் செய்துள்ளார். அதை நீங்களும் நானும் சரி செய்யப் போகிறோம் அப்படித் தானே. பிரபஞ்சத்தின் சிற்பிக்குக் கேவலம் சாதாரண தச்சர்கள் கற்றுக்கொடுக்கப் போகிறார்கள். அவர் இந்த உலகை ஒரு விகாரமான இடமாக விட்டுச் சென்றுவிட்டார். அதை நீங்கள் அழகுபடுத்தப் போகிறீர்கள் அப்படித தானே!

சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ அணிகளின் உதைபந்தாட்டப் போட்டி

இராணுவ அணிகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டிகளின் இறுதிப்போட்டி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பாதுகாப்பு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை இரவு 6.30 மணி முதல் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதில் கொழும்பில் இருந்துவரும் இசைக்குழுவின் இசைக்கச்சேரி, இராணுவ மேற்கத் தேயகுழுவின் நடன நிகழ்ச்சி மறறும வாணவேடிக்கைகள் என்பனவும் இடம்பெறவுள்ளன. (ச-43)

## கொலைக்...

அவரை 15 நாள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட சங்கராச்சரரி தனக்கு உடல் நலம் சரியில்லை என்றும் மருத்துவமனையில் சிகிச்சை பெற அனுமதிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதை நீதிமன்றம் நிராகரித்து சிறையில் அடைக்க உத்தரவிட்டது. இதனிடையே காஞ்சி சங்கராச்சாரியாரை பிணையில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காஞ்சி சங்கராச்சாரி கைது செய்யப்பட்டதையடுத்து அவரது மடம் எதிரே பெரும் திரளாக கூடிய மக்கள் பட்டாசுகளை கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சங்கராச்சாரியார் கைது குறித்து சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி காவல்துறை நடவடிக்கையை வரவேற்றுப் பாராட்டினார். இக் கொலை வழக்கில் சங்கராச்சாரியை கைது செய்யக்கோரி தி.மு.க. நடத்தவிருந்த போராட்டம் ஒத்திவைக்கப்படுவதாகவும் அவர் அறிவித்தார். (ச)

## மாவீரர் தினம்...

பொறுப்பாளர் அன்புமாறன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தரப்பில் மாவட்ட நிர்வாகத்துறை பொறுப்பாளர் தயாமோகன் பட்டிருப்பு கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வா ஊடக இணைப்பாளர் மனேஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராணுவ தரப்பில் 23 - 2 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி கேணல் எல்.ஆர். அமரதுங்க விசேட பொலிஸ் அதிரடிப்படை உதவிப் பொலிஸ் அதிபர் எம். ஸ்ரீசேன, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஷ் சமரதிவாகர உட்பட பொலிஸ் மற்றும படை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ச-121)

## பொதுஜன ஐக்கிய முன்னணி...

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், நான் 1994ம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பைக் எடுத்தபோது நாடு பயங்கரவாதத்துக்கும் போருக்கும் அகப்பட்டு சிக்குண்டு காணப்பட்டது.

1983ம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கம் தமிழ்மக்களை அடக்கி ஒடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் காரணமாகவே யுத்தம் ஏற்பட்டது.

1994ம் ஆண்டுக்குப்பின்னர் சமாதானத்திற்கு என்னால் இடப்பட்ட அடித்தளம் 2001 ஆண்டு குறிப்பிடத்தக்க அளவு சீர்குலைக்கப்பட்டது. ஆயினும் எமது அரசாங்கம் தற்போது போதுமான மக்கள் பலத்துடனேயே காணப்படுகிறது.

அதனால் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து கொண்டு செல்லுவதற்காக நாங்கள் உறுதி பூண்டுள்ளோம் இச்சந்தர்ப்பத்தில் நாட்டுப் பற்றுடைய சகல அரசியல் கட்சிகளினதும் ஆதரவினை வேண்டி நிற்கிறோம் என்றார்.

எதிர்க்கட்சியினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே மோசமான நெருக்கடி இருப்பதாகக் காட்ட முனைகிறது இதனை நிருபித்துக் காட்டமுனைந்து வருகிறார்கள்.

எதிர்ககட்சியின் இச் செயலுக்கு எதிரணி ஊடகங்களும் துணை போகின்றன அரசாங்கத்தின் இரு பிரதான கட்சிகளுக்குமிடையே எவ்வித வேறுபாடும் கிடையாது என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

கடந்த காலங்களைவிட மேலும் அபிவிருத்தி திட்டங்களை தற்போதைய கூட்டமைப்பு அரசாங்கம் அமுல்படுத்தவிருக்கின்றது என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச121,8)

## கழுத்து நெரிக்கப்பட்டு...

இச்சம்பவத்தின் போது இரண்டு பிள்ளைகளின் தாயான இராசநாயகம் குணமணிதேவி (வயது 62) என்பவரே கொலை செய்யப்பட்டவராவர் தனது வளர்ப்பு மகனுடன் வசித்து வந்த பிரஸ்தாப வயோதிபப் பெண் கடந்த இரு நாட்களுக்குமுன் கொலை செய்யப்பட்டிருப்பதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளதாக கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி அருணகிரி சிறிசெல்வம் தெரிவித்தார்.

பிரஸ்தாப வயோதிபப் பெண் தனது வளர்ப்பு மகனுடன் வசித்து வந்ததாகவும் எனினும் கடந்த இருநாட்களாக வளர்ப்பு மகன் வீட்டில் இல்லை என கூறப்படுகின்றது. வளர்ப்பு மகன் நேற்று தனது வீட்டிற்குச் சென்றபோது கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும் அதனூடாக தனது வளர்ப்புத்தாயின் இருகால்களும் தெரிந்ததாகவும் பொலிஸாருக்குத் தெரிவித்தார்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் கதவு திறக்கப்பட்டு உள்ளே சென்று பார்த்தபோது தலையில் அடிகாயங்களுடன் கழுத்துநெரிக்கப்பட்ட நிலையிலும் அழுகிய நிலையில் சடலம் காணப்பட்டது.

பிரஸ்தாப பெண் அதிக நகைகள் வைத்திருந்ததாகவும் அதனை எடுப்பதற்காக இக்கொலை செய்யப்பட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

அவரிடம் இருந்ததாக கூறப்படும் நகைகள் எவையும் அங்கு இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சடலத்தை யாழ். மாவட்ட மேலதிக நீதவான் சிறிநிதி நந்தசேகரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன் மருத்துவப் பரிசோதனைக்காக சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை இக் கொலை விசாரணை தொடர்பாக அவரது வளர்ப்பு மகன் கோப்பாய் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ச-130-74)

## யாழ். சிறை...

யப்படவுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பேரில் இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக பதவியேற்று 10 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் இந்திரகுமாரினால் அவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர். (ச)

## ஜன சமுத்திரத்தின் மத்தியில்...

ஹெலிகொப்டரிலிருந்து அரபாத்தின் பூதவுடல் தாங்கிய பெட்டி இறக்கப்பட்டது. உணர்ச்சிவசப்பட்ட நிலையில் காணப்பட்ட அவர்களின் ஆதரவாளர்கள் ஊடாக அவரது உடல் தாங்கிக்கொண்டு செல்லப்பட்டது. அப்போது தமது தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பலஸ்தீனர்கள் தமது கைகளை உயர்த்தி கோஷம் இட்டனர்.

சனக் கூட்டத்திற்கு மத்தியில் அவ்ரது சவப் பெட்டியை நகர்த்துவதற்கு வசதியாக பலஸ்தீனப் படையினர் வானை நோக்கி துப்பாக்கியால் சுடும் நிலையும் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் அங்கிருந்த மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. தான் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று அரபாத் விரும்பியிருந்த ஜெருசலேத்தின் அல்லாஜ் சா மசூதியில் எடுத்து வரப்பட்டு அரபாத்தின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அதற்கு முன்பாக எகிப்தியத் தலைநகர் கெய்ரோவிலிருந்து அரபாத்தின் சவப்பெட்டி ரமலா நகருக்கு வான் வழியாக எடுத்துவரப்பட்டது. அதற்கு முன்னர் அரபாத்தின் உடலுக்கு இராணுவ மரியாதையுடன் கெய்ரோ நகரில் இறுதி அஞ்சலி வழங்கப்பட்டது.

அரபாத்தின் மனைவி சோஹா அரபாத், அவருடைய 9 வயது மகள் மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட முக்கிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இந்த இறுதி அஞ்சலியில் பங்குபற்றினர்.

இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள ஒரு மசூதியில் தொழுகை நடாத்தப்பட்ட பின்னர் பலஸ்தீன தேசியக் கொடியால் போர்க்கப்பட்ட அரபாத்தின் சவப்பெட்டி ஆறு குதிரைகள் பூட்டிய ஒரு பீரங்கி வண்டியில் வைத்துக் கொண்டுவரப்பட்டது.

கடும் பாதுகாப்பின் மத்தியில் இவ் இறுதி அஞ்சலி நிகழ்வு நடாத்தப்பட்டது. இதில் பங்குபற்ற பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (ச-121)


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக R.B. சௌத்திரியின் தயாரிப்பில்

சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

ஐயா

ரிக்கெற் முற்பதிவுகள் யாழ். பெயின்ற் காடின் கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம், நாகம்ஸ் சினிமா

டொல்பி ஒலியமைப்புடன் (ரீல்ஸ்)

தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே).

ராஜா, யாழ்ப்பாணம்

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான

அஜித் (இருவேடம்) பூஜா நடித்த

அட்டகாசம்

பு.நேரம் 10.30, 2.30, 6.30, 9.30

ரீக்கெற் முற்பதிவுசெய்துகொள்ளலாம். (C/692)

11.00, 2.30, 6.30, 9.00 இற்கு

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த

ட்ரீம்ஸ்

யாழ்ப்பாணம் (ரீல்ஸ்) (சி 675)


## மரண அறிவித்தல்



### திரு. தர்மலிங்கம் பரராஜசிங்கம்

**உரிமையாளர் (ஜவ்னா ரேடர்ஸ் -யாழ்ப்பாணம், யாழ்ப்பாண இரும்பகம், கதிரவன் இரும்பகம் -சாவகச்சேரி)**

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் பரராஜசிங்கம் அவர்கள் 10.11.2004 அன்று புதன்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சீதேவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், கிருஷ்ணவதியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீரஜனி (அவுஸ்ரேலியா), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,

கௌரி (கன்டா), சிவபாலன் (அவுஸ்ரேலியா), தயராஜினி, அனுஷியா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாகரெத்தினம் மற்றும் இராசையா, சரோஜினிதேவி (சுவிஷ்)ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற நாகேஷ், சரஸ்வதி, ஞானம்பாள், விஜயலஷ்மி காலஞ்சென்ற சிவநாமம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

நிருஜா, நிவேதா, பிரவீனன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன் அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**27/7 இந்துமகளிர் ஒழுங்கை**
**கந்தர்மடம்,**

தகவல்: **மனைவி, மக்கள்**
**021 222 3205**

(C/689)

## பதவி வெற்றிடம்

**ஓவ்செற் பயிலுநர்கள் (இரவுக் கடமை)**

**பத்திரிகை விநியோகஸ்தர்கள்**

**(யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் உள்ள, சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் மட்டும்.)**

**தகுதியானவர்கள் நேரில் வரவும்.**

வலம்புரி,
15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.

நிர்வாக உத்தியோகத்தர்

## ஈராண்டு நினைவஞ்சலி - 13.11.2004



முன்னாள் கெம்பருத்தி ஆசிரியர்

மாதவம் செய்தாள் அன்னை
மகனாய் நீ அவதரிக்க;
அருந்தவம் கொண்டார் சோதரர் - சோதரி
அன்புத் தம்பியாய் நீ அமைய;
செய்தவப் பயனாய் கைப்பிடித்தாள்
காதலொடு நினை மனையாள்;

### அமரர் கணபதி கணேசன்

தம்முயிரே தந்தையென
நின்னுயிராய் நின்மக்கள்;
நட்பெனும் சொல்லுக்குனை
இலக்கணம் கொண்டார் நண்பர்;
உற்றாரும் உறவினரும்
உத்தமனாய் கண்டார் உனை.

ஆத்ம சாந்திக்காய் அநுதினமும் நின் நினைவில்; **குடும்பத்தினர்**

## பிற்போடப்பட்டுள்ளது

**ஸ்கந்தவரோதயக் கல்லூரி 110 ஆவது ஆண்டு நினைவு விழா 13.11.2004.**

**பரிசளிப்பு விழா 14.11.2004 மேற்படி நாட்களில் நடைபெறவிருந்த விழாக்கள் காலநிலை சீரின்மை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது விழாநாள் குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும்.**

கந்தரோடை,
சுன்னாகம்,
2004.11.12.

அதிபர்
விழாக் குழுவினர்.

(9007)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் ... அவர்களது அச்சகத்தில் 13.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org